# TNPSC தேர்வுகளுக்கான நடப்பு நிகழ்வுகள் - ஜனவரி 2017

## தமிழகம்

- **புது தில்லியில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் பங்கேற்ற தமிழக அரசின் அலங்கார ஊர்திக்கு 3வது பரிசு கிடைத்துள்ளது**.அருணாச்சல பிரதேசத்தின் அலங்கார ஊர்திக்கு முதல் பரிசு கிடைத்துள்ளது. திரிபுரா மாநில அலங்கார ஊர்திக்கு 2வது பரிசு கிடைத்துள்ளது. 3வது பரிசை தமிழகமும் மகாராஷ்டிரமும் பகிர்ந்து கொண்டுள்ளன.

- **குடியரசு தினத்தில், தமிழக அரசுத் துறை ஊர்திகளின் அணிவகுப்பு பரிசுகள்** : குடியரசு தின விழாவில் அரசுத் துறைகளின் திட்டங்கள், செயல்பாடுகளை பறைசாற்றும் வகையில் நடைபெற்ற அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பில், பூக்களால் அலங்கரிக்கப்பட்ட காளை மாட்டை முகப்பில் தாங்கி வந்த **வேளாண்மைத் துறைக்கு முதல் பரிசு** அளிக்கப்பட்டது.இதேபோன்று, முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் போன்ற அம்சங்களை உள்ளடக்கி அணி வகுத்த **சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறைக்கு இரண்டாம் பரிசு** அறிவிக்கப்பட்டது. மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் உருவத்தை முகப்பில் தாங்கியும், அதற்குக் கீழே தலைமைச் செயலக பிரதான கட்டடத்தின் வடிவத்தையும் இடம்பெறச் செய்திருந்த **செய்தி - மக்கள் தொடர்புத் துறைக்கு மூன்றாம் பரிசு** அளிக்கப்பட்டது.

- **"சிறிது நேரம் மனிதனாயிருந்தவன்' எனும் பெயரில், தமிழிலிருந்து மலையாளத்துக்கு மொழிபெயர்க்கப்பட்ட, வைரமுத்துவின் சிறுகதைத் தொகுப்பு** கேரளாவிலுள்ள திருச்சூரில் வெளியிடப்பட்டது. மாத்ருபூமி பதிப்பித்திருக்கும் இந்த நூலை இந்நூலை கே.எஸ்.வெங்கிடாசலம் தமிழிலிருந்து மலையாளத்திற்கு மொழிப்பெயர்த்துள்ளார். அந்நிகழ்வில் பேசிய வைரமுத்து, இந்தியாவின் சிறந்த படைப்பாளிகளுக்கு பாரத ரத்னா விருது போல, **மொழிப்பெயர்ப்பாளர்களுக்கு "பாஷா ரத்னா' என்ற விருது வழங்கப்பட வேண்டும்** என கருத்து தெரிவித்துள்ளார்.

- **காந்தி கிராம பல்கலை மாணவர் சேர்க்கையில் 'திருநங்கைகளுக்கு 3 சதவீத இடஒதுக்கீடு** வழங்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது," என, துணைவேந்தர் நடராஜன் தெரிவித்துள்ளார்.

- சர்வதேச சந்தையில் ரூ.5 கோடி மதிப்புள்ள 'கோகைன்' போதைப் பொருளை, 'அயன்' திரைப்பட பாணியில் மாத்திரை போன்று விழுங்கி கடத்திய **தென் ஆப்பிரிக்க பெண் நோம்பிபிதி சோமி** சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

- **காஷ்மீர் பனிச்சரிவில் சிக்கி இறந்த தமிழக வீரர்களுக்கு நிவாரண நிதி** : காஷ்மீர் பனிச்சரிவில் சிக்கி, இந்திய ராணுவ வீரர்கள் 21 பேர் பலியாயினர். இதில் தஞ்சையை சேர்ந்த இளவரசன், மதுரையை சேர்ந்த சுந்தரபாண்டியன் 2 பேர் அடங்குவர். இவர்களுக்கு தலா ரூ. 20 லட்சம் நிவாரண நிதியை முதல்வர் ஓ.பி.எஸ்., அறிவித்தார்.

- **ஜல்லிக்கட்டு தொடர்பாக கடந்த 2011 மற்றும் 2016-ம் ஆண்டு வெளியிட்ட அறிவிக்கையை திரும்ப பெற்று கொள்வதாக உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது**. கடந்த 2011ஆம் ஆண்டு காட்சிப்படுத்தக்கூடாத விலங்குகள் பட்டியலில் இருந்து காளைகளை நீக்கி, சில கட்டுப்பாடுகளுடன் ஜல்லிக்கட்டு நடத்த வழிவகை செய்யும் அறிவிப்பாணையை மத்திய அரசு பிறப்பித்தது. பின்னர், 2014ஆம் ஆண்டு விலங்குகள் வதைத்தடுப்புச் சட்டத்தின் கீழ் ஜல்லிக்கட்டு நடத்த உச்சநீதிமன்றம் மீண்டும் தடைவிதித்தது. இதனையடுத்து, மத்திய அரசின் சார்பில் ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி வழங்க வேண்டும் என்று அறிவிப்பாணை பிறப்பித்தது மத்திய அரசு. தமிழக அரசு நிறைவேற்றியுள்ள அவசரச்சட்டத்தினால், இவ்விரு அறிவிப்பாணைகளுக்கும் தேவையில்லாத சூழல் ஏற்பட்டுள்ளதால் மத்திய அரசு இந்த முடிவை எடுத்திருக்கிறது.

- **குடியரசு தின விழாவில் முதல் முறையாக தேசிய கொடியை ஏற்றினார் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம்** : பொதுவாக, மாநில கவர்னர் தேசியக் கொடியேற்றுவது வழக்கம். ஆனால், இந்த ஆண்டு, தமிழகத்திற்கு தனி கவர்னர் நியமிக்கப்படவில்லை. மஹாராஷ்டிரா கவர்னர் வித்யாசாகர் ராவ், தமிழகத்தின் பொறுப்பு கவர்னராக உள்ளார். இன்று, அவர் மஹாராஷ்டிராவில் நடைபெறும் குடியரசு தின விழாவில், தேசியக் கொடியேற்றுகிறார். எனவே, தமிழகத்தில் குடியரசு தின விழாவில், தேசியக் கொடியேற்றும் வாய்ப்பு, முதல்வர் பன்னீர்செல்வத்திற்கு கிடைத்துள்ளது.

- **தமிழக சட்டப்பேரவையில் ஜல்லிக்கட்டுக்கான சட்ட மசோதா 23-01-2017 அன்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.** இந்த சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டதை

அடுத்து, ஜல்லிக்கட்டு நடத்த இருந்த தடை முற்றிலும் நீக்கப்பட்டுள்ளது. இந்த அவசரச் சட்டம் மூலம் விலங்குகள் வதை தடுப்புச் சட்டத்தில் மாநில அளவில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. முன்னதாக, கடந்த 20-01-2017 அன்று, இந்த சட்டம் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டு, 21-01-2017 அன்று தமிழக ஆளுநர் வித்யாசாகர் ராவ் அவர்களால் அவசரச் சட்டமாக பிறப்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

- **ஜல்லிக்கட்டுக்கு** தடை விதித்த மத்திய அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் **எழுத்தாளர் லஷ்மி சரவணக்குமார் தனக்கு வழங்கப்பட்ட யுவபுரஸ்கார் விருதினை திரும்ப அளித்துள்ளார்.**
- **தமிழின் முதல் பெண் நாவல் ஆசிரியர் வை.மு. கோதைநாயகி அம்மாள் . இவரின் முதல் நாவல் "வைதேகி' என்பதாகும்.** இந்திய விடுதலை போராட்டத்திலும் பங்கேற்றுள்ளார். இவரது நாடக நூல்களான அருணோதயம், தயாநிதி போன்றவை அக்காலத்தில் மிகுந்த பாராட்டுதல்களைப் பெற்றிருக்கின்றன. இவரது "ராஜமோகன்', "அனாதைப்பெண்' நாவல்கள் திரைப்படமாக தயாரிக்கப்பட்டுள்ளன.
- **எம்ஜிஆரின் 100-வது பிறந்தநாளையொட்டி (ஜனவரி 17), சிறப்பு நினைவு தபால் தலையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.** இதற்கு முன்னர் 1990-ஆம் ஆண்டிலும் எம்ஜிஆரை சிறப்பிக்கும் வகையில் மத்திய அரசு தபால் தலை வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. எம்ஜிஆர் பிறந்த நாள் நூற்றாண்டை ஒட்டி, வெளியிடப்பட்டுள்ள அஞ்சல் தலை ரூ.15 மதிப்பு கொண்டதாகும். இதேபோன்று, எம்.ஜி.ஆரின் உருவம் பதித்த அஞ்சல் உறையும் வெளியிடப்பட்டது. இதன் விலை ரூ.11.
- **"பினாகின்' - தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் புதிய செயலி அறிமுகம் :** தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தலங்கள் குறித்த தகவல்கள் அடங்கிய "பினாகின்' எனப்பெர்யரிடப்பட்டுள்ள செயலியை சுற்றுலாத் துறை அமைச்சர் வெல்லமண்டி நடராஜன் அறிமுகம் செய்து வைத்தார். இந்தச் செயலியில் தமிழ்நாட்டின் புராதன சுற்றுலாத் தலங்களான தஞ்சை பெரியகோயில், கங்கைகொண்ட

சோழபுரம், தாராசுரம், மாமல்லபுரம் ஆகிய இடங்கள் தொடர்பான தகவல்களை தமிழ், ஆங்கிலத்தில் ஒலி வசதியோடு தெரிந்து கொள்ளலாம்.

- **உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன முன்னாள் இயக்குநரும் தமிழறிஞருமான ச.வே.சுப்பிரமணியன் (87) 12-01-2017 ஆம் தேதி காலமானார்.** 1985ஆம் ஆண்டு ஆலங்குளம் அருகே தமிழூர் என்ற ஊரை உருவாக்கி அதை தலைமையிடமாகக் கொண்டு ச.வே.சுப்பிரமணியன் தமிழ் ஆராய்ச்சி செய்து வந்தார். இங்கு தமிழன்னைக்கு சிலை வைத்து வணங்கிய பெருமையும் இவரையே சேரும். மதுரைக்கு அடுத்து தமிழூரில்தான் தமிழன்னைக்குச் சிலை இருப்பது குறிப்பிடத்தக்கது.
- **தமிழகத்தின் முன்னாள் ஆளுநரும் பஞ்சாப் மாநில முன்னாள் முதல்வருமான சுர்ஜித் சிங் பர்னாலா காலமானார்.** இவர் தமிழகத்தின் ஆளுநராகவும் பணியாற்றியுள்ளார். 1990-1991 மற்றும் 2004-2011 ஆகிய இரண்டு காலகட்டங்களில் தமிழகத்தின் ஆளுநராக அவர் பணிபுரிந்துள்ளார்.
- **அனைத்திந்திய அம்மா திராவிட முன்னேற்றக் கழகம் (அஅதிமுக) என்ற பெயரில் புதிய கட்சி நாமக்கல்லில் துவங்கப்பட்டுள்ளது**. கட்சியின் ஒருங்கிணைப்பாளர் செல்ல.ராசாமணி கட்சிக் கொடியை அறிமுகப்படுத்தினார். அதிமுக கட்சி கொடியின் வண்ணத்தில் இருந்த கொடியின் நடுவில் அண்ணாவுக்குப் பதில் ஜெயலலிதா இரு விரலைக் காண்பித்தபடி இருக்கும் படம் இடம் பெற்றுள்ளது.
- **1,000 ஆண்டுகள் பழமையான 'பாண்டியன் பாறை' கல் திட்டு** : தமிழர்களின் பாரம்பரியத்தையும், வீரத்தையும் பறைசாற்றும் வகையில், 1,000 ஆண்டுகளுக்கு முன் அமைத்த, பாண்டியன் பாறை என்ற, 'கல் திட்டு' நாமக்கல் மாவட்டத்தில் உள்ளது.
- **தமிழ் பின்னணி பாடகர் டி.எம்.சவுந்தரராஜன் நினைவாக ரூ.5 மதிப்பிலான தபால் தலை ஒன்றை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.**
- **கிருஷ்ணா நதி நீர் பங்கீடு: தமிழகத்திற்கு 2.5 டி.எம்.சி. தண்ணீர் வழங்க ஆந்திர அரசு ஒப்புதல்** : தமிழக முதல் அமைச்சர் ஓ. பன்னீர் செல்வம்

ஆந்திர முதல் மந்திரியுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் தமிழகத்திற்கு 2.5 டி.எம்.சி. தண்ணீர் கண்டலேறு அணையிலிருந்து வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- **தைப் பொங்கல் விழா கொண்டாடும் ஜனவரி மாதம் தமிழ் மரபுத் திங்கள் விழாவாக கனடாவில் வரும் 13,14,15 ஆகிய நாள்களில் கொண்டாடப்படுகிறது**. கனடாவில் உள்ள மார்கம் மாநகராட்சி, லோகன் கணபதியின் முயற்சியால் கடந்த 2011-முதல் குறிப்பிட்ட நாள்களில் தமிழ் மரபு திங்கள், தமிழ்ப் புத்தாண்டு தைப்பொங்கல் என அலுவலக அளவில் அறிவித்து கொண்டாடி வருகிறது குறிப்பிடத்தக்கது.
    - **சர்வதேச அளவில் பேசப்படும் மொழிகளுள் மிகத் தொன்மையான மொழியாக இருக்கிற தமிழ்மொழி**, இந்தியாவில் செம்மொழியாகவும் சிங்கப்பூரில் ஆட்சி மொழியாகவும், இலங்கையில் தேசிய மொழியாகவும், தமிழகத்தில் ஆட்சிமொழியாகவும் இருந்து வருகிறது பெருமைக்குரியது.
- **தமிழகத்தின், முதல் நவீன சிறுவர், 'டிராபிக்' பூங்கா, கோவையில் நேற்று திறக்கப்பட்டது.** வாகனங்களை பாதுகாப்பாக இயக்குவது; வாகன பராமரிப்பு; விபத்து தவிர்ப்பு; போக்குவரத்து விதிகள் உள்ளிட்டவற்றை, மாணவர் பருவத்திலேயே தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில், சிறுவர், 'டிராபிக் பார்க்' திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- **தமிழகம் முழுவதும் 'தலாக்' சான்றிதழ் வழங்க ஹாஜியார்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது** :
    - முஸ்லிம் தனிநபர் சட்டத்தில் திருமணமான ஆண்கள் 3 முறை தலாக் சொல்லி மனைவியை விவாகரத்து செய்யும் நடைமுறை உள்ளது. ஹாஜியார்கள் தலாக் சான்று வழங்கி விட்டால் அதுவே இறுதி முடிவு என எடுத்துக்கொள்ளப்படுகிறது.
    - இம்முறைக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சய்கிஷன் கவுல், நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ் ஆகியோர் விசாரித்து பிறப்பித்த உத்தரவில் 1880-ம் ஆண்டு ஹாஜியார்கள் சட்டம், பிரிவு 4-ல் ஹாஜிக்கள் என்பவர்கள் யார்? அவர்களுக்கு என்ன அதிகாரம் உள்ளது? என்பது தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதன்படி நீதிபரிபாலனம் செய்யும் உரிமை

ஹாஜியார்களுக்கு இல்லை.தலாக் விசயத்தில் ஹாஜியார்கள் தரக்கூடிய சான்றிதழ் என்பது எந்த விதத்திலும் சட்டரீதியான ஆவணம் கிடையாது. அந்த சான்று ஹாஜியார்களின் தனிப்பட்ட கருத்து என்று தான் எடுத்துக்கொள்ள வேண்டும். எனவே இந்த வழக்கு முடியும் வரை தமிழகம் முழுவதும் உள்ள ஹாஜியார்கள், தலாக் சான்று வழங்கக்கூடாது. தலாக் சான்று வழங்க ஹாஜியார்களுக்கு தடை விதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

- **புதிதாக கொற்கை பாண்டியர் நாணயம் கண்டுபிடிப்பு :** மன்னர் தலையும், செழியன் பெயரும் கொண்ட மேலும் ஒரு கொற்கை பாண்டியர் நாணயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தென்னிந்திய நாணயவியல் கழக தலைவர் இரா.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார். ஏற்கனவே சங்ககால கொற்கை பாண்டியர் வெளியிட்ட, 'செழியன்' நாணயங்களை வைத்து ஆய்வு செய்தபோது, தாம்பரபருணி நாடு, தென் தமிழகத்தில் தான் இருந்தது எனவும், அதன் தலைநகர், 'கொற்கை' எனவும் அறியப்பட்டுள்ளது. . இப்போதும் மேலும், மேலும் சான்றுகள் கிடைத்துக் கொண்டிருப்பது, தமிழக தொன்மை வரலாற்றைப் பற்றிய ஆய்வுக்கு அதிகளவு உதவும் என நம்பப்படுகிறது.

- **மாநில மின் பகிர்மான நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்குவதை தடுக்க மத்திய அரசு கொண்டு வந்துள்ள 'உதய்' மின் திட்டத்தில் தமிழக அரசு இணைந்தது.**

    - தில்லியில் 09-01-2017 அன்று நடைபெற்ற இதற்கான கூட்டத்தில் மத்திய அரசு சார்பாக மத்திய மின்துறை அமைச்சர் பியூஸ் கோயலும், தமிழக அரசு சார்பாக மாநில மின்துறை அமைச்சர் தங்கமணியும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

    - இந்த திட்டத்தில் இணைந்துள்ளதன் மூலமாக தமிழக அரசுக்கு ரூ.11,000 கோடி நிதியாக கிடைக்கும். மேலும் முதலாமாண்டில் மின் பகிர்மான நிறுவனத்திற்கான கடனில் 75% மாநில அரசு ஏற்கும். இரண்டாமாண்டு அது 50% ஆகவும், முன்றாம் ஆண்டில் அது 25% ஆகவுமிருக்கும்.

- **தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வி சேவைகள் கழகத்தின் தலைவராக முன்னாள் அமைச்சர் பா.வளர்மதி நியமிக்கப்பட்டுள்ளார்.** பா.வளர்மதி கடந்த 2011-16 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் சமூக நலன்-சத்துணவு திட்டத் துறை அமைச்சராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

- **திருச்சி மாவட்டம், பேட்டைவாய்த்தலை அருகே சோழர் கால கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளது.** முழுமையான நிலையில் உள்ள முதல் கல்வெட்டு தஞ்சையைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்த முதலாம் ஆதித்த சோழனின் கல்வெட்டு. இம்மன்னன் தனது தந்தை பரகேசரி விஜயாலய சோழனுக்குப் பின்னர் கி.பி. 870 முதல் கி.பி. 907 வரை ஆட்சி செய்தான். தற்போது கிடைத்துள்ள புதிய கல்வெட்டு ஆதித்த சோழனின் 35-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 905) கல்வெட்டாகும்.

- **சென்னையில் 40-ஆவது புத்தகத் திருவிழா** 6-1-2017 அன்று சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள செயின்ட் ஜார்ஜ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் தொடங்கியது.

- அமெரிக்காவில், அதிபர் ஒபாமா நடத்திவரும் வளரும் தலைமுறையினருக்கான கல்வி பிரசார இயக்கத்துக்கு **தமிழகத்தை பூர்வீகமாகக் கொண்ட மாணவி சுவேதா பிரபாகரன் (16) தேர்ந்தெடுத்துள்ளார்**. இந்த மாணவியின் பெற்றோர் தமிழ்நாட்டின் திருநெல்வேலி பகுதியை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

- **14-வது சென்னை சர்வதேச திரைப்பட விழா, சென்னையில் 05-01-2016 அன்று தொடங்கியது.** தமிழக அரசு சார்பில் ரூ.50 லட்சம் மானியத்தை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் விழாக் குழுவிடம் வழங்கினார். இந்தோ சினி அப்ரிசியேஷன் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் சென்னை சர்வதேச திரைப்பட விழா கொண்டாடப்படுகிறது. எட்டு நாட்கள் நடைபெறும் இந்த விழாவில், 45 நாடுகளைச் சேர்ந்த 150 படங்கள் திரையிடப்பட உள்ளன. மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக அவர் நடித்த ‘ஆயிரத்தில் ஒருவன்’, ‘அடிமைப்பெண்’ ஆகிய படங்கள் இந்த விழாவில் திரையிடப்பட்டன.

- **திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு அருகே சோழர்கள் கால கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன**. இந்த கல்வெட்டுகள் மூலம் தென்கரும்பலூர், தண்டராம்பட்டு ஆகிய பகுதிகளில் 13-ஆம் நூற்றாண்டில் சோழர்கள் வாழ்ந்தது தெரியவந்தது. மேலும், கல்வெட்டில் இருந்த ஓவியங்கள், எழுத்துகளை ஆய்வு செய்தபோது, கோயில் அர்ச்சகர்களுக்குத் தேவையான நிலத்தை சோழர்கள் நன்கொடையாக வழங்கியதும் தெரியவந்துள்ளது.

- **பிரபல நாடகக் கலைஞர், நாடக நடிகர், தயாரிப்பாளர் விழா வேந்தர் என்.கே.டி.முத்து (82) காலமானார்**. ஏராளமான பாராட்டு விழாக்களை

www.tnpscportal.in

வெற்றிகரமாக நடத்தியதால் எம்.ஜி.ஆரால் விழா வேந்தர் எனப் பட்டம் கொடுத்து கௌரவிக்கப் பட்டவர்.

# இந்தியா

- **தென்னாப்பிரிக்காவின் சுற்றுலாவை மேம்படுத்த "ஒவ்வொரு நொடியும் ஆச்சர்யம்' என்ற தலைப்பில்** சென்னை, பெங்களூரு, தில்லி, மும்பை ஆகிய நகரங்களில் **சுற்றுலா கண்காட்சியை** அந்நாட்டு சுற்றுலாக் குழு நடத்தி வருகிறது.
- **வட கிழக்கு திரைப்பட விழா** (North East Film Festival) மஹாராஷ்டிராவின், பூனே நகரில் நடைபெற்றது
- தமிழகத்தின் ஜல்லிக்கட்டைப் போலவே நீதிமன்ற உத்தரவால் தடைபட்டுள்ள, **கர்நாடகத்தின் பாரம்பரியமான கம்பளா எனப்படும் எருமைப் பந்தய விளையாட்டுக்கு அனுமதி அளிக்க கோரி பெங்களூருவில் போராட்டம்** நடைபெற்று வருகிறது.
- **இந்தியாவில் ஜனவரி 2017 வரை 111 கோடி பேருக்கு ஆதார் எண் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாகவும்**, 99 சதவீத இளைஞர்கள் ஆதார் எண் பெற்றுள்ளதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- **நிர்பயா நிதித் தொகுப்பில் இருந்து பெண்களின் பாதுகாப்புக்கான திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 16 சதவீதம் மட்டுமே பயன்படுத்தப்பட்டு உள்ளதாக** மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- **உலகின் ஆற்றல்மிகு நாடுகள் குறித்து அமெரிக்கப் பத்திரிகை "தி அமெரிக்கன் இன்டரஸ்ட்" வெளியிட்டுள்ள பட்டியலில் இந்தியா 6-ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.** 2017-ஆம் ஆண்டுக்கான உலகின் முதல் 8 வல்லரசு நாடுகளின் பட்டியலில் இந்தியாவுக்கு 6-ஆவது இடம் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில், முதல் இடத்தை அமெரிக்காவும், இரண்டாவது இடத்தை சீனா மற்றும் ஜப்பான் ஆகியவை பகிர்ந்து கொண்டுள்ளன. ரஷியா 4-ஆவது இடத்தையும், ஜெர்மனி 5-ஆவது இடத்தையும் வகிக்கின்றன. 7 மற்றும் 8-ஆவது இடங்களில் முறையே ஈரான் மற்றும் இஸ்ரேல் நாடுகள் இடம் பெற்றுள்ளன.

www.tnpscportal.in

- **இந்தியாவுக்கான ரஷிய நாட்டுத் தூதர் அலெக்சாண்டர் கடாகின்** உடல்நலக் குறைவு காரணமாக தில்லியில் உள்ள மருத்துவமனையில் 26-01-2017 **அன்று காலமானார்.** இந்தியாவுக்கான ரஷிய நாட்டுத் தூதராக தில்லியில் கடந்த 2009-ஆம் ஆண்டில் இருந்து கடாகின் பணியாற்றி வந்தார்.

- **மத்தியப் பிரதேசத்தில் பாலித்தீன் பைகளுக்கு மே 1-ஆம் தேதி முதல் தடை**விதிக்கப்படும் என்று அம்மாநில முதல்வர் சிவராஜ் சிங் சௌஹான் அறிவித்துள்ளார்.

- இந்திய குடியரசு தின விழாவை கௌரவிக்கும் வகையில், துபாயில் உள்ள உலகின் மிக உயரமான கட்டடம் என்ற பெருமையைப் பெற்ற **புர்ஜ் கலிபா 26-01-2017 அன்று மூவர்ண நிறத்தில் ஒளிர்ந்தது**. அபுதாபி நாட்டு இளவரசர் **ஷேக் முகமது பின் சையது** குடியரசுத்தின சிறப்பு விருந்தினராக இந்தியா வருகை புரிந்திருப்பதையொட்டி இந்த பெருமை வழங்கப்பட்டுள்ளது.

- டிரான்ஸ்பரன்சி இண்டர்நேசனல் (Transparency International) எனும் அமைப்பால் வெளியீடப்பட்டுள்ள **"ஊழல் குறியீட்டுப் பட்டியல் 2016" (corruption perception index)) ல் இந்தியா 79 வது இடத்தைப் பெற்றுள்ளது**. இந்தப்பட்டியலில், உலகிலேயே ஊழல் மிகவும் குறைவான நாடாக டென்மார்க் அறிவிக்கப்பட்டுள்ளது.

- பச்சிளம் குழந்தைகள் இறப்பை (infant mortality) தடுப்பதற்காக, **"துலாரி கான்யா" (Dulary Kanya)** எனும் திட்டத்தை அருணாச்சல் பிரதேச மாநில அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

- வட கிழக்கு முதலீட்டாளர்கள் மாநாடு **மேகாலயாவிலுள்ள சில்லாங்** நகரில் நடைபெற்றது.

- பாலியல் குற்றச்சாட்டையடுத்து, **மேகாலயம் மற்றும் அருணாசலப் பிரதேச ஆளுநராக இருந்த தமிழகத்தைச் சேர்ந்த சண்முகநாதன் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.**
    - சண்முகநாதன் ஆளுநராக இருந்த **மேகாலய மாநிலத்தில் கூடுதல் பொறுப்பை வகிக்குமாறு அண்டை மாநிலமான அஸ்ஸாமின் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்தையும், அருணாசலப் பிரதேசத்தில் கூடுதல் ஆளுநராக பொறுப்பு வகிக்குமாறு நாகாலாந்து ஆளுநர் பத்மநாப பாலகிருஷ்ண ஆச்சார்யாவையும்** குடியரசுத்தலைவர் பிரணாப் முகர்ஜி கேட்டுக்கொண்டுள்ளார்.

- **இந்திய வம்சாவளியினருக்கு ஆஸ்திரேலியாவின் உயரிய விருது** : ஆஸ்திரேலிய தினத்தன்று (ஜன.26) 2017-ஆம் ஆண்டுக்கான உயரிய விருதுகள் பெறும் நபர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டன. மெல்போர்ன் நகரில் மருத்துவராகப் பணிபுரிந்துவரும் **புருஷோத்தம் சாரிக்கர்,** பெர்த் நகரில் வசித்துவரும் **மாக்கன் சிங் கங்குரே, விஜய் குமார் (தமிழர்)** ஆகிய 3 இந்திய வம்சாவளியினர் மருத்துவம், கல்வி, சமூகத்தின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டது ஆகிய பொதுப் பிரிவின் கீழ் அந்நாட்டின் உயரிய விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில், ஆஸ்திரேலிய, இந்திய மருத்துவ பட்டதாரிகள் சங்கத்தின் முன்னாள் தலைவராக புருஷோத்தம் சாரிக்கர் பதவி வகித்திருக்கிறார். அவர், "ஆகாசவாணி சிட்னி' என்ற பெயரில் சிட்னி நகரில் சமூக வானொலி தொடங்கியிருக்கிறார்.

- **இந்திய வம்சாவளியைச் சேர்ந்த உத்தம் தில்லனுக்கு அமெரிக்க அதிபரின் சட்ட ஆலோசனைக் குழுவில் முக்கியப் பதவி** அளித்து அதிபர் டிரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

- ஜனவரி 2017 ல் , "பிரம்மபுத்திரா இலக்கிய திருவிழா" நடைபெற்ற இந்திய நகரம் - **கவுகாத்தி**

- இந்தியாவின் முதல் ஆடம்பர பயண பத்திர்க்கையை, "லட்சுரி டிராவல் டைம்ஸ்" (Luxury Travel Times) எனும் பெயரில் மொபைல் பத்திரிக்கையை துவங்கியுள்ள பயண நிறுவனம் - **மேக் மை டிரிப் (MakeMyTrip)**

- **இந்தியாவின் முதல் அஞ்சல் நிலைய பாஸ்போர்ட் அலுவலகம் (Post Office Passport Seva Kendra (POPSK))** கர்நாடக மாநிலத்திலுள்ள மைசூர் நகரில் அமைக்கப்பட்டுள்ளது.

- 68-**வது குடியரசு தினவிழா நிகழ்ச்சிகளில் அபுதாபி இளவரசர் ஷேக்முகமது பின் சையது அலி சிறப்பு விருந்தினராகக்** கலந்துகொண்டுள்ளார்.

- **புவி வெப்பமயமாதலுக்குக் காரணமான வாயுக்களின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான கியோட்டோ சர்வதேச உடன்படிக்கையை அமல்படுத்த இந்தியா முடிவு செய்துள்ளது.**
  - பசுமைக்குடில் (கிரீன்ஹவுஸ்) வாயுக்கள் அளவு அதிகமாவதால், உலகின் வெப்பநிலை அதிகரித்து வருகிறது.

- இதனைத் தடுப்பதற்காக, உலக நாடுகளின் மாசு வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான உடன்படிக்கை ஜப்பானின் கியோட்டோ நகரில் கடந்த 1997-ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்டது.
- இந்த உடன்படிக்கையில், 2008-முதல் 2012-ஆம் ஆண்டுவரை உலக நாடுகள் மாசு வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நெறிமுறைகள் வகுக்கப்பட்டன.
- இந்த நிலையில், 2013 முதல் 2020-ஆம் ஆண்டு வரை மாசு வாயு வெளியேற்றத்துக்கான கட்டுப்பாடுகளை விதிக்கும் இரண்டாம் கட்ட கியோட்டோ உடன்படிக்கை கத்தார் தலைநகர் தோஹாவில் 2012-ஆம் ஆண்டு கையெழுத்தானது.
- இந்த உடன்படிக்கையில் இந்தியா கையெழுத்திட்டிருந்தாலும், வளரும் நாடுகள் மட்டுமே அதில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை எட்டுவது கட்டாயம் என்பதால் இந்தியா அதனை இதுவரை அமல்படுத்தாமல் இருந்துவந்தது.
- இந்த நிலையில், கியோட்டோ ஒப்பந்தத்தை இந்தியா அமல்படுத்தினால், அது அன்னிய முதலீடுகளை ஊக்குவிக்கும் என்று கூறப்படுகிறது.

❖ இமயமலையில் அமைந்துள்ள உலகின் மிக உயரமான **எவரெஸ்ட் சிகரத்தின் உயரத்தை மறுஅளவீடு செய்ய இந்திய நில அளவீட்டுத் துறையான "ஜியலாஜிக்கல் சர்வே ஆ்ஃப் இந்தியா' முடிவு செய்துள்ளது.** பல்வேறு தரப்பினர் எவரெஸ்ட் சிகரத்தின் அளவீடு செய்தாலும், "ஜியலாஜிக்கல் சர்வே ஆ்ஃப் இந்தியா' கூறிய **29,028 அடி உயரம்** என்பதுதான் எவரெஸ்ட்டின் சரியான உயரமாகும். நேபாளத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டு 2 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், எவரெஸ்ட்டின் உயரம் குறித்து பல்வேறு தரப்பினருக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

❖ **இந்தியா - ஐக்கிய அரபு அமீரக நாடுகள் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு, வர்த்தக மேம்பாடு உள்ளிட்டவை தொடர்பாக 14 முக்கிய ஒப்பந்தங்கள்** 2-01-2017 அன்று கையெழுத்தாகின. முன்னதாக, இந்தியாவில் உள்கட்டமைப்புத் துறையில் 7,500 கோடி அமெரிக்க டாலர்களை (சுமார் ரூ.5.1 லட்சம் கோடி) ஐக்கிய அரபு அமீரக நாடுகள் முதலீடு செய்ய உள்ளதாகவும், அதுதொடர்பான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

- பிப்ரவரி, மார்ச் 2017 மாதங்களில் சட்டமன்ற தேர்தல் நடைபெறவுள்ள ஐந்து மாநிலங்கள் - **உத்தரபிரதேசம், உத்தரகாண்ட், பஞ்சாப், மணிப்பூர், கோவா**
- சமீபத்தில் கல்வி நிலை ஆண்டறிக்கையை ( Annual Status of Education Report (ASER 2016)) வெளியிட்டுள்ள நிறுவனம் - **"பிரதாம்" ( Pratham )** எனும் தன்னார்வ தொண்டு நிறுவனம்
- "**ஹைட்டி காலரா நோய் தாக்குதல் நிவாரணத்திற்காக" இந்தியா 100,000 அமெரிக்க டாலரை வழங்கியுள்ளது**. ஹைட்டி காலரா நோய் தாக்குதல் என்பது, கடந்த அக்டோபர் 2010 முதல் இதுவரையில் ஹைட்டி, டொமினிக்கன் குடியரசு, கியூபா மற்றும் மெக்சிகோ நாடுகளை பெருமளவில் பாதித்து வரும் காலரா நோய் ஆகும். இதனை தடுப்பதற்கு ஐ.நா அமைப்பு மூலம் பல்வேறு நாடுகள் நிதியுதவி அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.
- . **"ரப்பர் மண் தகவல் முறைமை" (Rubber Soil Information System (RubSIS))** யை மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- **"வர்ஷிதா ஓய்வூதிய திட்டம் 2017" (Varishtha Pension Bima Yojana 2017)** என்பது 60 வயது மற்றும் அதற்கு மேலுள்ள மூத்த குடிமக்களுக்கான சமூக பாதுகாப்புத் திட்டமாகும். இத்திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை சமீபத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.
- தேசிய எஃகுக் கொள்கை 2015 (National Steel Policy 2005) க்குப் பதிலாக **தேசிய எஃக்குக் கொள்கை மசோதா 2017 (Varishtha Pension Bima Yojana 2017 )** மத்திய அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளது.
- **"பாக்கே - பாகா" (Pakke-Paga) எனப்படும் திருவிழா** நடைபெற்ற மாநிலம் - அருணாச்சல பிரதேசம்
- **நாட்டிலேயே முதல்முறையாக தபால் ஓட்டுகளை மின்னனு முறையில் செலுத்தும் முறை** வரவிருக்கிற **கோவா சட்டமற்றதேர்தலில்** நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இம்முறையில், தபால் ஓட்டுரிமையுடைய அரசில் பணிபுரியும் நபர்கள் தங்கள் வாக்குச்சீட்டுகளை மின்னஞ்சல் மூலம் பெற்று, அந்த படிவத்தை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்து மின்னஞ்சல் மூலமே அனுப்பலாம்.

- மேலும், **நாட்டிலேயே முதல் முறையாக, அனைத்து தொகுதிகளிலும் வாக்களித்ததை உறுதிச் செய்யும் தாள் ஒப்புகைச்சீட்டு வழங்கும் முறை** (Voter-Verified Paper Audit Trail (VVPAT)) கோவா சட்ட மன்றதேர்தல் 2017 ல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

❖ **உலக வங்கியின் உதவியுடன் "மின் சுகாதார திட்டம்" ("e-health project") எனும் திட்டத்தை கேரள அரசு** மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் மூலம், அனைத்து சுகாதார நிறுவனங்களின் ஆவணங்களும் மின்மயமாக்கப்பட உள்ளன.

❖ **ஒரே நேரத்தில் 3.5 லட்சம் பேர் தேசிய கீதம் பாடி உலக சாதனை** : குஜராத் மாநிலம், ராஜ்கோட் மாவட்டத்தில் 21-01-2017 அன்று, ஒரே நேரத்தில் சுமார் 3.5 லட்சம் பேர் தேசிய கீதம் பாடி, புதிய உலக சாதனை படைத்தனர். ராஜ்கோட்டிலுள்ள கக்வாட் என்ற இடத்தில், சுமார் ரூ.60 கோடி செலவில் "கோடியார்' அம்மனுக்கு கட்டப்பட்ட பிரமாண்ட கோயிலில் சிலை பிரதிஷ்டை விழாவின்போது, சுமார் 3.5 லட்சம் பேர் ஒரே நேரத்தில் தேசிய கீதம் பாடி இந்த "கின்னஸ்' சாதனை நிகழ்த்தியுள்ளனர்.

❖ **நாட்டின் மிகப் பெரிய போர்க் கப்பலான, 'ஐ.என்.எஸ்., விக்ரமாதித்யா'வில், முதல் முறையாக செயற்கைக்கோள் மூலம் இயங்கும், ஏ.டி.எம்., மையம் திறக்கப்பட்டுஉள்ளது.** ஐ.என்.எஸ்., விராட் போர்க்கப்பலில், தொலைபேசி மூலம் இயங்கும், ஏ.டி.எம்., மையம் இயங்கி வருகிறது குறிப்பிடத்தக்கது.

❖ **ஒபாமா ஓய்வை தொடர்ந்து டுவிட்டரில் முதலிடம் பிடித்த மோடி** : 'டுவிட்டர்' சமூக வலைத்தளத்தில், அதிகமானோர் பின்தொடரும் நாட்டு தலைவர்கள் பட்டியலில், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா முதலிடம் வகித்து வந்தார். அவரை 8 கோடியே 10 லட்சம் பேர் பின்தொடர்ந்து வருகின்றனர். இந்நிலையில், ஜனாதிபதி பதவியில் இருந்து ஒபாமா ஓய்வு பெற்றதை தொடர்ந்து, அதிகம்பேர் பின்தொடரும் நாட்டு தலைவர்கள் பட்டியலில் மோடி முதலிடத்தை பிடித்துள்ளார். அவரை டுவிட்டரில் 2 கோடியே 65 லட்சம் பேர் பின்தொடர்ந்து வருகிறார்கள்.

❖ **"நாசா முக்த் இயக்கம்"** - மதுக்கு அடிமையாதல் இல்லாத மாநிலமாக மாற்றுவதற்காக, **பீகார் மாநில அரசினால்** 11,000 கி.மீ தூரத்திற்கு அமைக்கப்பட்ட பிரமாண்டமான மனிதச்சங்கிலி இயக்கமாகும்

- **ஐக்கிய அரபு எமிரேட் (UAE) நாட்டுடனான** சிறு மற்றும் நடுத்தர தொழில்களில் புதுமைத்துவம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

- இந்தியா புதுமை பட்டியல் (India Innovation Index (III)) எனப்படும் பட்டியலை தயாரிக்கும் அமைப்பு - **உலக அறிவுசார் உரிமைகள் அமைப்பு (World Intellectual Property Organization (WIPO))**

- **கிறிஸ்தவ தேவாலய நீதிமன்றங்கள் அளிக்கும் விவாகரத்து சட்டப்படி செல்லாது** என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

- **Mission 41K - என்பது**, இந்திய இரயில்வேயினால் துவக்கப்பட்டுள்ள திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் ரூ.41000 கோடி மதிப்பிலான ஆற்றலை சேமிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

- **சர்வதேச தடுப்பு மருந்து நிறுவனத்தின் (International Vaccine institute) மேலாண்மைக் குழுவில் இந்தியா உறுப்பினராவதற்கு** மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. **இந்த அமைப்பின் தலைமையிடம் தென் கொரியா நாட்டின் சியோல்** நகரில் உள்ளது.

- **ShaGun - என்பது** அனைவருக்கும் கல்வி திட்டமான "சர்வ சிக்ஷ அபியான்" திட்டத்தை பற்றிய விழிப்புணர்வை மேலும் அதிகரிக்கச்செய்ய மத்திய மனிதவளத் துறையினால் உருவாக்கப்பட்டுள்ள இணையதளமாகும்.

- ஹிமாச்சல் பிரதேச மாநிலத்தின் இரண்டாவது தலைநகராக தெரிவு செய்யப்பட்டுள்ள நகரம் - **தர்மசாலா**

- **மூத்த குடிமக்களுக்கு ரயில் கட்டணத்தில் 50 சதவீதம் சலுகை வழங்குவதைப் போல் 58 வயதுக்கு மேற்பட்ட திருநங்கைகளுக்கும் 50 சதவீதம் கட்டணச் சலுகை வழங்கப்படும் என்று ரயில்வே அறிவித்துள்ளது**. மேற்கண்ட விதிமுறை மாற்றத்தின் மூலம் ரயில் பயண முன்பதிவு, பயணச்சீட்டு ரத்து ஆகிய படிவங்களிலும், இணையதளத்திலும் பாலினத்துக்கான பகுதியில் ஆண், பெண் என்பதோடு திருநங்கைகள் என்ற பாலினமும் சேர்க்கப்படும்.

- **சட்டவிரோதமாக துப்பாக்கிகள் வைத்திருந்ததாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் இருந்து ஹிந்தி நடிகர் சல்மான் கானை ராஜஸ்தான் மாநிலம்**

**ஜோத்பூர் நீதிமன்றம் விடுவித்துள்ளது.** கடந்த 18 ஆண்டுகளுக்கு முன்பு, 1998ல் ராஜஸ்தானில் அரியவகை மான்களை வேட்டையாடியதாக சல்மான் கான் மீது 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அதில், உரிமம் காலாவதியாகிவிட்ட துப்பாக்கிகளை அவர் பயன்படுத்தியதாகவும் குற்றம்சாட்டப்பட்டது. இது தொடர்பாக, சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருப்பதை தடை செய்யும் சட்டத்தின்கீழ் சல்மான் கான் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

- கொடிய தொற்றுநோய்களில் இருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக, புதிய, **மேம்படுத்தப்பட்ட தடுப்பு மருந்துகளை அறிமுகம் செய்யும் சர்வதேச தடுப்பு மருந்து நிர்வாகக் குழுவில், இந்தியா முழுநேர உறுப்பினராவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது**.

- **ஜார்க்கண்ட் மாநிலத்தில் ரூ.200 கோடியில் இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம்** அமைப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- **இந்தியா - ஐக்கிய அரபு அமீரகம் இடையே கடல்சார் கல்வி, பயிற்சி ஆகியவற்றை பகிர்வது தொடர்பாக, புரிந்துணர்வு ஒப்பந்தம்** மேற்கொள்வதற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- **கங்கை நதியின் தூய்மையைக் காப்பதற்காக 20,000 இளைஞர்களை தூய்மைத் தூதர்களாக நியமிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது**. உத்தரகண்ட், உத்தரப் பிரதேசம், பிகார், மேற்கு வங்கம் ஆகிய கங்கை நதி பாயும் மாநிலங்களில் நதிக்கரையோர கிராமங்களில் இருந்து 20,000 இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்கள் தூய்மைத் தூதர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

- **நாகாலாந்து** மாநிலத்தில் சுகாதார சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக, ஜனவரி 2017 ல் **இந்திய அரசு உலக வங்கியுடன் நிதியுதவி ஒப்பந்தம்** செய்துள்ளது.

- **"சார்ட் ஹாவா ஆ∴பரேசன்"** (Operation Sard Hawa) - எனப்படுவது, அடர்ந்த மூடுபனி கால்நிலையைப்பயன்படுத்தி, இராஜஸ்தானிலுள்ள மேற்கு சர்வதேச எல்லை வழியாக அந்நியரின் ஊடுருவலைத் தடுப்பதற்கான செயல் திட்டமாகும்.

- ஜனவரி 2017 ல், இந்தியாவுடன், கூட்டுறவுத்துறையில் பரஸ்பர ஒத்துழைப்பிற்கான ஒப்பந்தத்தைச் செய்துகொண்டுள்ள நாடு - **மொளரீசியஸ்**

- கருந்துளை (black hole) பற்றிய ஆராய்ச்சியின் முன்னோடியான இந்திய விஞ்சானி **சி.வி.விஸ்வேஸ்வரா காலமானார்.**

- இந்திய தொழில்நுட்ப கழகங்களில் (IIT) மாணவர் சேர்க்கையில் மாணவிகளுக்கு இட ஒதுக்கீடு வழங்கவேண்டும் என மத்திய அரசிடம் பரிந்துரைத்துள்ள குழு - **தீமோத்தேயு கோண்சால்வ்ஸ் குழு (ITimothy Gonsalves Committee)**

- சமீபத்தில் மரணமடைந்த சுதந்திரப்போராட்ட வீரர் **மோகன் சிங் ஜோசன் (Mohan Singh Josan)** அவர்களின் மாநிலம் - **இராஜஸ்தான்**

- **மேகாலயாவிலுள்ள மவ்ல்ய்னோங் (Mawlynnong) கிராமம் ஆசியாவிலேயே தூய்மையான கிராமமாக அறியப்படுகிறது.**

- **ஐரோப்பிய அணு ஆராய்ச்சி அமைப்பின் (European Organization for Nuclear Research (CERN) ) இணை உறுப்பினராக இந்தியா இணைந்துள்ளது**. இதற்கான ஒப்பந்தம் கடந்த நவம்பர் 2016 ல் கையெழுத்தாகியுள்ளது.

- passportindex.org **எனும் அமைப்பு வெளியிட்டுள்ள உலக நாடுகளின் கடவுச்சீட்டு பட்டியலில் (passport index) இந்தியா 78 வது இடத்தைப் பெற்றுள்ளது**. இப்பட்டியலில் முதல் மூன்று இடங்களை முறையே ஜெர்மனி, சிங்கப்பூர் மற்றும் ஸ்வீடன் நாடுகள் பெற்றுள்ளன.

- ராஜஸ்தான் மாநிலம் பிகானியரில் **14-01-2017 அன்று 24வது சர்வதேச ஒட்டகத் திருவிழா தொடங்கியது.**

- **கடந்த, 115 ஆண்டுகளில் இல்லாத வகையில், 2016ல், வெயில் அதிகமாகவிருந்துள்ளது**. அந்த ஆண்டில், பல்வேறு தட்ப, வெப்பநிலை காரணமாக உயிரிழந்த, 1,600 பேரில், வெயில் காரணமாக மட்டும், 700 பேர் பலியாகி உள்ளனர் என இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- சமீபத்தில் மரணமடைந்த முன்னாள் பஞ்சாப் மாநில முதல்வர் சுஜித் சிங் பர்னாலா கவர்னராக பதவி வகித்த மாநிலங்கள் - **தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், உத்தரகாண்ட்**

- சமீபத்தில் , மத்திய ஊரக வளர்ச்சித்துறையிடம் , சமூக பொருளாதார மற்றும் ஜாதி ரீதியிலான கணக்கெடுப்பு (Socio Economic and Caste Census ) தொடர்பான தனது அறிக்கையை வழங்கியுள்ள குழு - **சுமித் போஸ் குழு**

- ஆசியா - பசுபிக் ஒலிபரப்பு யூனியன் (Asia-Pasific Broadcasting Union(ABU)) நடத்திய முதல், சர்வதேச நடன திருவிழா நடைபெற்ற இந்திய நகரம் - **ஹைதராபாத்**
- ஐ.ஐ.டி மானவர் சேர்க்கையில் பெண்குழந்தைகளுக்கு தனி இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என பரிந்துரைத்துள்ள குழு - **தீமோத்தி கோண்சால்வ்ஸ் குழு (Timothy Gonsalves Committee)**
- மின் ஆளுமையை மேம்படுத்துவதற்காக சமீபத்தில் **SEZ India** எனும் மொபைல் அப்ளிகேசனை வெளியிட்டுள்ள மத்திய அமைச்சரவை - **வணிகம் மற்றும் தொழில்துறை (Commerce and Industry)**
- **விமான சேவையில் ஈடுபட்டு வரும் ஸ்பைஜ் ஜெட் நிறுவனம், 205 விமானங்களை போயிங் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யும் வகையில் ஒப்பந்தம்** மேற்கொண்டுள்ளது.
- **இந்தியாவில் 2017 மற்றும் 2018ம் ஆண்டுகளில் வேலைவாய்ப்பின்மை சற்று அதிகரிக்கும் என்று ஐ.நா சர்வதேச தொழிலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.**
  - 2016ம் ஆண்டு தெற்காசியாவின் வளர்சி விகிதம் 6.8 சதவீதமாக இருந்த நிலையில் இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 7.6 சதவீதமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.
  - எனினும் கடந்த ஆண்டில் இந்தியாவில் 17.7 மில்லியனாக இருந்த வேலையின்மை இந்த ஆண்டில் 17. 8 மில்லியனாக அதிகரிக்க கூடும் என்றும் குறிப்பாக 3.4 சதவீதம் பேர் வேலையிழக்க நேரிடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
  - கடந்த ஆண்டு உலக அளவில் 5.7 சதவீதமாக இருந்த வேலையின்மை வரும் ஆண்டில் 5.8 ஆக அதிகரிக்கும். குறிப்பாக 34 லட்சம் பேர் வேலை இழக்க கூடும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- **கேரள மாநிலத்தில் ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் தேசிய உணவுப் பாதுகாப்புச்** சட்டத்தின் கீழ் உணவுப் பொருள்கள் விநியோகம் செய்யப்படவுள்ளன.
- **ஜெய்ஷ்-ஏ-முகமது பயங்கரவாத அமைப்பின் தலைவரை ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ.நா.) மூலம் சர்வதேச பயங்கரவாதியாக அறிவிக்க** இந்தியா மேற்கொண்டுள்ள முயற்சிக்கு **பிரான்ஸ் நாடு முழு ஆதரவு** தெரிவித்துள்ளது

- இந்தியாவில் சுற்றுப்பயணம் வந்த போர்ச்சுகல் பிரதமர் அன்டோனியா கோஸ்டா, கோவாவில் உள்ள தனது முன்னோர்களின் இல்லத்துக்கு 11-1-2017 அன்று சென்றார்.
- **'காதி'யில் காந்திக்கு பதிலாக மோடி** : தேசிய காதி கிராம தொழில்கள் ஆணையம் இந்த ஆண்டு வெளியிட்டுள்ள டைரி மற்றும் சுவர் காலண்டர்களில் வழக்கமாக இடம் பெறும் காந்தியின் படத்திற்கு பதிலாக பிரதமர் மோடியின் படம் இடம் பெற்றுள்ளது. தேசிய தேசிய காதி கிராம தொழில்கள் ஆணையத்தின் தலைமை அலுவலகம் மும்பையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.
- **உலகின் முதல் பாலியல் இலக்கிய திருவிழா** பீகார் மாநிலத் தலைநகர் பாட்னாவில் நடைபெற்றது.
- ஜனவரி 2017 ல், தென் மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர்களுக்கான பிராந்திய கூடுகை சென்னையில் நடைபெற்றுள்ளது.
- இணையவெளிப் பாதுகாப்பு (cyber security) தொடர்பாக இந்தியா அமெரிக்காவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.
- **இந்தியாவின் முதல் சூரிய சக்தியினால் இயங்கும் படகு** கேரளாவில் பயனுக்கு வந்துள்ளது.
- **சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தகவல் தொடர்பு கூடுகை (International Conference on Disability Communication 2017)** நடைபெற்ற இடம் - மும்பை
- **"Festival of India" (இந்தியா திருவிழா)** என்ற பெயரிலான கலாச்சார திருவிழா நடைபெறவுள்ள நாடு - கானா
- **தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளை அளிக்கும் தேசிய வேலைவாய்ப்பு சேவைத் திட்டத்தில் வேலைக்காக 3.75 கோடி பேர் பதிவு செய்துள்ளனர்** என்று மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை இணையமைச்சர் (தனிப்பொறுப்பு) பண்டாரு தத்தாத்ரேயா தெரிவித்துள்ளார்.
- **காற்று மாசுபாடு காரணமாக இந்தியாவில் ஆண்டுக்கு 12 லட்சம் பேர் உயிரிழப்பதாகவும், நாட்டிலேயே காற்று மாசு அதிகமாக உள்ள நகரம் தில்லி**

என்றும் கிரீன்பீஸ் இந்தியா என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் "ஏர்போகலிப்ஸ்' எனப்படும் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- இந்தியாவில் உள்ள 168 நகரங்களில் எந்தவொரு நகரமும், உலக சுகாதார அமைப்பால் (டபிள்யுஹெச்ஓ) வரையறுக்கப்பட்டுள்ள காற்றுத் தர மதிப்பளவுகளுக்கு இணங்கியதாக இல்லை என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- காற்று மாசுபாடு காரணமாக இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தித் திறன் 3 சதவீதம் அளவுக்கு குறைந்துள்ளதாகவும் குறிப்பிடத்தக்கது.
- இந்தியாவில் காற்று மாசுபாடு அதிகமாக உள்ள முதல் 20 நகரங்களில், கடந்த 2015-ஆம் ஆண்டில் பிஎம்10 என்ற காற்று மாசு குறீயீட்டின் அளவானது 268/168 என்ற அளவில் இருந்துள்ளது.
- இந்தப் பட்டியலில் 268 என்ற குறீயிட்டு அளவுடன் தில்லி முதலிடத்தில் உள்ளது. அதைத் தொடர்ந்து 258 முதல் 200 என்ற குறீயிட்டு அளவுடன் காஜியாபாத், அலாகாபாத், பரேலி (உத்தரப் பிரதேசம்), ஃபரீதாபாத் (ஹரியாணா), ஜாரியா (ஜார்க்கண்ட்), அல்வார் (ராஜஸ்தான்), ராஞ்சி, குசுன்டா, பாஸ்டகோலா (ஜார்க்கண்ட்), கான்பூர் (உத்தரப் பிரதேசம்), பாட்னா (பிகார்) ஆகிய நகரங்கள் உள்ளன.
- இதில் 268 என்ற காற்று மாசு குறியீடானது, மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் ஆண்டுதோறும் நிர்ணயிக்கப்படும் தேசிய சுற்றுப்புற காற்றுத் தர மதிப்பீட்டு அளவை விட 4.5 மடங்கு அதிகமாகும். அதேவேளையில், உலக சுகாதார அமைப்பால் (டபிள்யுஹெச்ஓ) வரையறுக்கப்பட்ட அளவை விட 13 மடங்கு அதிகமாகும்.

❖ **கனடா நாட்டில் அமேசான் நிறுவனம் இந்திய தேசியக் கொடி பதிக்கப்பட்ட மிதியடிகளை தனது இணையதளம் மூலம் விற்பனை** செய்து வருவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என அந்நிறுவனத்திற்கு வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

❖ **பிரதமர் மோடியின் "மனதின் குரல்' நிகழ்ச்சி உரை புத்தக வடிவில் வெளியிடப்பட்டுள்ளது**. கடந்த 2014-ஆம் ஆண்டு அக்டோபர் 3-ஆம் தேதி முதல் கடந்த ஆண்டு நவம்பர் 27-ஆம் தேதி வரை "மனதின் குரல்' நிகழ்ச்சியில் பிரதமர் மோடி ஆற்றிய உரைகளை உத்தரப் பிரதேச மாநிலம், **ஃபைசாபாத் நகரைச்**

**சேர்ந்த ஆய்வு மாணவரான ராஜீவ் குப்தா (29) புத்தகமாகத் தொகுத்துள்ளார்.** தில்லியில் நடைபெற்றுவரும் உலக புத்தகக் கண்காட்சியில் இப்புத்தகத்தின் வெளியீட்டு விழா நடைபெற்றது.

❖ **கென்யாவின் விவசாயத் துறை வளர்ச்சிக்காக, 100 மில்லியன் டாலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.683 கோடி) கடனுதவி** வழங்கப்படும் என்று இந்தியா அறிவித்துள்ளது. இதற்கான ஒப்பந்தம், தில்லியில் பிரதமர் மோடி, கென்ய அதிபர் உஹுரு கென்யாட்டா முன்னிலையில் 11-1-2016 அன்று கையெழுத்தானது.

❖ **இந்தியாவில் நிலத்தடி நீர் குறைவதற்கு, இந்தியப் பெருங்கடல் வெப்பமடைந்து வருவதே முக்கிய காரணம்** என்று, குஜராத் மாநிலம், காந்திநகர் ஐஐடி ஆய்வில் தெரியவந்துள்ளது.

❖ **அமெரிக்காவைச் சேர்ந்த 4 இந்திய வம்சாவளியினர், இளம் விஞ்ஞானிகளுக்கான அதிபர் விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.** மான்ட்க்ளேர் மாகாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பங்கஜ் லால், வடகிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கௌசிக் சவுத்ரி, இகான் மருத்துவக் கல்லூரியில் பணியாற்றும் மணீஷ் அரோரா, கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராதனா திரிபாதி ஆகிய இந்திய வம்சாவளி விஞ்ஞானிகளும் அடங்குவர். அமெரிக்காவில், அறிவியல் மற்றும் பொறியியல் ஆய்வுத் துறையில் வழங்கப்படும் மிகப் பெரிய விருது இது என்பது குறிப்பிடத்தக்கது.

❖ **உலகின் மிகப்பெரிய தெருவிளக்குகள் மாற்றும் திட்டம் புது தில்லியில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.**

❖ "டிஜிட்டல் இந்தியாவிற்காக இளைஞர்கள்" (Youth for Digital India) என்ற மைய நோக்கோடு, **21 வது தேசிய இளைஞர்கள் திருவிழா (National Youth Festival) நடைபெற்ற இடம் - ரோக்டாக் (Rohtak), ஹரியானா.**

❖ **Fly For Sure** (நிச்சயம் பறப்பீர்கள்) எனப்படும் திட்டத்தை துவக்கியுள்ள நிறுவனம் - **ஏர் இந்தியா (Air India)**

❖ **CAPART -** Council for Advancement of People's Action and Rural Technology

❖ **"பர்வாசி கவுசல் விகாஸ் யோஜனா" ( Pravasi Kaushal Vikas Yojana ) -** மத்திய அரசின் இந்த புதிய திட்டத்தின் நோக்கம், வெளிநாடுகளில் வேலை தேடும் இளைஞர்களுக்கு தேவையான பயிற்சியளித்து சான்றிதழ் வழங்குதலாகும்.

- **போர்ச்சுகல் பிரதமர் அண்டோனியோ கோஸ்டா** இந்தியாவிற்கு 7 நாள் அரசு முறைப்பயணமாக வந்துள்ளதையொட்டி, **இந்தியா - போர்ச்சுகல் இடையே பாதுகாப்பு, பயங்கரவாத ஒழிப்பு உள்பட 7 ஒப்பந்தங்கள் 7-1-2017 அன்று கையெழுத்தாகின.**

- **தில்லி பிரகதி மைதானத்தில் 25-ஆவது உலக புத்தகக் கண்காட்சி** 7-1-2017 அன்று தொடங்கியது.

- வெளிநாடுவாழ் இந்தியர்கள் (என்ஆர்ஐ) ஜூன் 30-ஆம் தேதி வரை பழைய ரூபாய் நோட்டுகளை ரிசர்வ் வங்கிகளில் செலுத்தி புதிய ரூபாய் நோட்டுகளை பெற்றுக் கொள்ளலாம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- **உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை விமர்சித்து தாம் தெரிவித்த கருத்துக்கு உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி மார்க்கண்டேய கட்ஜு நிபந்தனையற்ற மன்னிப்பு கோரினார்.** கேரள மாநிலத்தில் 23 வயது இளம்பெண் ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட வழக்கில், குற்றவாளிக்கு விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனையை, உச்ச நீதிமன்றம் ஆயுள் தண்டனையாகக் குறைத்ததை விமர்சித்து கட்ஜு கடந்த சில மாதங்களுக்கு முன் கருத்து தெரிவித்திருந்ததையடுத்து, அவர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

- **ஏப்ரல் 1-ந் தேதி முதல் 100 நாள் வேலை திட்டத்துக்கு ஆதார் அட்டை கட்டாயம் தேவை** என்று மத்திய அரசு அறிவித்து உள்ளது.

- ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்த , புகழ்பெற்ற **இந்தி நடிகர் ஓம் பூரி மாரடைப்பினால் 5-1-2017 அன்று மரணமடைந்தார்.**

- **இந்து நதி ஒப்பந்தம் (Indus Water Treaty) படி,** இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளுக்கிடையேயானா தண்ணீரைப் பகிர்ந்துகொள்ளும் விவகாரத்திலுள்ள பிரச்சனைகளைப் பற்றி இரு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் சர்வதேச அமைப்பு - உலக வங்கி (World Bank)

- சாலை விபத்துக்குள்ளாவோருக்கு உடனடியாக உதவியளிப்பவர்களை ஊக்குவிக்கும்வண்ணம் **"நல்ல சமாரியன் கொள்கை" ('Good Samaritan Policy') எனும் திட்டத்தை டெல்லி மாநில அரசு அறிமுகம் செய்துள்ளது.** இதன்படி, சாலைவிபத்திற்குள்ளானவர்களுக்கு உதவி புரிபவர்க்கு ரூ.2000 ஊக்கத்தொகை மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்,

- **தீவு சுற்றுலா திருவிழா 2017 (Island tourism Festival)** அந்தமான் நிக்கோபாரிலுள்ள போர்ட் பிளேயர் நகரில் நடைபெறுகிறது.

- **சர்வதேச காத்தாடி திருவிழா (International Kite Festival)** ஜனவரி 8 முதல் 13 வரை **குஜராத் மாநிலத்தில்** நடைபெறுகிறது.

- **நாட்டிலேயே முதன்முறையாக பொதுமக்கள் நலனுக்காக 'மகிழ்ச்சித் துறை' என்ற ஒன்றை அறிமுகப்படுத்திய மத்திய பிரதேச அரசு**, அதை தற்போது மாநிலத்தின் அனைத்து நகரங்களுக்கும் விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது. மாநிலத்தில் ஏழ்மை நிலையில் இருக்கும் மக்களுக்கு தேவையான உதவிகள் தகுதியான நபர்களிடமிருந்து சென்று சேர்வதை உறுதி செய்வதன் பொருட்டு 'மகிழ்ச்சித் துறை என்ற ஒன்றை மத்திய பிரதேச அரசு சமீபத்தில் அறிமுகப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

- **கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மார்களுக்கு ரூ.6 ஆயிரம் ஊக்கத் தொகையை மத்திய அரசு வழங்குகிறது.**
    - கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மார்களுக்கு அவர்களது பணிகால ஊதிய இழப்பீட்டை கருத்தில் கொண்டு, ரூ.6 ஆயிரம் ஊக்கத் தொகையாக வழங்கப்படும். இதனால் குழந்தையை பிரசவிப்பதற்கு முன்பும், குழந்தையை பிரசவித்த பிறகும் போதிய காலத்துக்கு அவர்களால் ஓய்வு எடுக்க முடியும். கர்ப்ப காலம் மற்றும் குழந்தைக்கு முதல் 6 மாத காலம் பாலூட்டும் நேரத்தில் தனது உடல்நலத்தை தாய்மார்கள் மேம்படுத்திக் கொள்வதுடன், ஊட்டச் சத்தையும் அதிகரிக்க முடியும்
    - மத்திய அரசு ஊழியர்கள், மாநில அரசு ஊழியர்கள் தவிர்த்து, அனைத்து கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மார்கள் முதல் 2 பிரசவங்களுக்கு இந்த ஊக்கத் தொகையைப் பெறலாம். ரூ.6 ஆயிரம் ஊக்கத் தொகை, 3 பிரிவுகளாக கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மார்களின் வங்கிக் கணக்கு அல்லது தபால் சேமிப்பு கணக்கில் அரசால் செலுத்தப்படும். அதாவது, கர்ப்ப காலத்தில் முதல் தொகையாக ரூ.3 ஆயிரமும், குழந்தை பிரசவித்த உடன் ரூ.1,500-ம், பிரசவத்துக்கு 3 காலத்துக்குப் பிறகு ரூ.1,500-ம் அளிக்கப்படும்.

- **தெற்கு ரயில்வேயில், முதன்முறையாக, 'சோலார்' மின்சார ரயில் பெட்டிகள்** இணைக்கப்பட்ட, **கோவை - மயிலாடுதுறை ஜனசதாப்தி எக்ஸ்பிரஸ் ரயிலை**, தெற்கு ரயில்வே பொது மேலாளர் வசிஷ்டஜோஹ்ரி துவக்கி வைத்தார்.

- **இந்திய நிர்வாகப் பணியாளர்கள் கல்லூரி** (Administrative Staff College of India (ASCI)) அமைந்துள்ள இடம் - **ஹைதராபாத், தெலுங்கானா**

- **சீக்கிய மதத்தின் குரு கோவிந்த் சிங்கின் 350 ஆவது பிறந்ததின விழா**வை பீகார் மாநிலம் பாட்னாவில் பிரதமர் மோடி துவக்கி வைத்தார்.

- **இந்தியாவில் இருந்து கத்திரிக்காய் போன்ற சிலவகை காய்கறிகளை ஏற்றுமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த 3 ஆண்டுகள் தடையை ஐரோப்பிய யூனியன் கூட்டமைப்பு நீக்கிக் கொண்டுள்ளது.**
  - இந்தியாவில் விளைவிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படும் மாம்பழங்கள், பாகற்காய், புடலங்காய், கத்திரிக்காய் போன்றவற்றை இறக்குமதி செய்வதற்கு, ஐரோப்பிய யூனியன் கூட்டமைப்பு கடந்த 2014-ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆண்டுகளுக்கு தடை விதித்தது. அவற்றினை விளைவிக்கும்போது பூச்சிக் கொல்லி மருந்துகள் போன்றவை அதிகளவில் இருப்பது தெரிந்தது. அதையடுத்து, இந்நடவடிக்கையை ஐரோப்பிய யூனியன் மேற்கொண்டது.
  - இதைத் தொடர்ந்து, மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கையால், இந்திய மாம்பழங்கள் மீதான தடையை ஐரோப்பிய யூனியன் கூட்டமைப்பு நீக்கியது.

- **விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த துறைகளில் போர்ச்சுக்கல் நாட்டுடனான ஒப்பந்தங்களுக்கு** மத்திய கேபினட் ஒப்புதல் வழங்கியுள்ளது

- **சர்வதேச சூரியசக்தி கூட்டணி தொடர்பான ஒப்பந்தத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது** :
  - பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் அந்நாட்டு அதிபருடன் சேர்ந்து சர்வதேச சூரியசக்தி கூட்டணியை பிரதமர் நரேந்திர மோடி கடந்த 2016 ம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கி வைத்தார்.
  - சூரியசக்தியில் சிறந்து விளங்கும் 121 நாடுகளை ஓர் அமைப்புக்குள் கொண்டு வந்து, அதுதொடர்பான ஆய்வு உள்ளிட்டவைகளை மேற்கொள்வதே இதன் நோக்கமாகும்.

www.tnpscportal.in

- இதுவரை இந்தக் கூட்டணியில், 25 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. இதில் இணைந்து செயல்படுவதற்குத் தயாராக இருப்பதாக ஐ.நா. மற்றும் உலக வங்கி ஆகியனவும் அறிவித்துள்ளன.

- உடல்நலக் குறைவு காரணமாக தமது **மாநிலங்களவை உறுப்பினர் பதவியை நடிகரும், திரிணமூல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவருமான மிதுன் சக்ரவர்த்தி ராஜிநாமா செய்துள்ளார்.**

- **சேவல் சண்டை நடத்துவதற்கு விதிக்கப்பட்ட தடையை நீட்டித்து ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநில உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது**.

- ஆந்திர மாநிலம், திருப்பதியில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள **இந்திய அறிவியல் மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி 3-1-2017 அன்று தொடங்கி வைத்தார்.**

- **"பர்கார்க் தனுவா ஜாத்ரா" ( Bargarh Dhanua Jatra)** எனப்படும் உலகப்புகழ்பெற்ற 11 நாள் திருவிழா **ஒடிசா மாநிலம் பர்கார்க் நகரில்** 3-1-2017 அன்று துவங்கியது.

- **தங்க நகைகளுக்கான "ஹால்மார்க்' முத்திரையில் மாற்றம்** : தங்க நகைகளுக்கான "ஹால்மார்க்' முத்திரையில் 2 முக்கிய மாற்றங்களை இந்திய தர நிர்ணய அமைவனம் அமல்படுத்தியுள்ளது. இந்தப் புதிய மாற்றம் ஜனவரி 1 -ஆம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளது.

  - தங்கத்தின் தரத்தை முறைப்படுத்தவும், பொதுமக்கள் நம்பிக்கையுடன் நகை வாங்கும் வகையிலும் "ஹால்மார்க் முத்திரை' 2003-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி, இந்திய தர நிர்ணய அமைவனம் (பிஐஎஸ்) நாடு முழுவதும் உள்ள தங்கத்தின் தரத்தைப் பரிசோதித்து, அவற்றுக்கு ஹால்மார்க் சான்று அளிக்க தனியாருக்கு உரிமம் அளித்தது. தமிழ்நாட்டை பொருத்தவரை 40 -க்கும் மேற்பட்ட மையங்களில் ஹால்மார்க் சான்று அளிக்கப்படுகிறது.

  - 7 வகை முத்திரை: இதுவரை 23, 22, 21, 18, 17, 14, 9 ஆகிய 7 வகையான கேரட் தங்க நகைகளுக்கு ஹால்மார்க் முத்திரை வழங்கப்பட்டு வந்தது. மேலும் நகைகளில் பொறிக்கப்பட்டிருக்கும் ஹால்மார்க் முத்திரையில் பிஐஎஸ் முத்திரை, தங்கத்தின் சுத்தத்தன்மை (எத்தனை கேரட் தங்கம் என்பதைக் குறிக்கும் எண்), தங்கத்தை சோதனை செய்து முத்திரை அளித்த மையத்தின் முத்திரை, நகை செய்யப்பட்ட ஆண்டு, நகை

www.tnpscportal.in

விற்பனை செய்யும் கடையின் முத்திரை ஆகிய 5 குறியீடுகள் இதில் இடம் பெற்றிருக்கும்.

- இனிமேல் 14, 18, 22 ஆகிய 3 வகையான தங்கநகைகளுக்கு மட்டுமே "ஹால்மார்க்' முத்திரையிடப்படும்.
- பொதுமக்களுக்கு எளிதில் புரியும் வகையில் 14 காரட் நகைக்கான நேர்த்தித்தன்மையின் அளவு 585, 18 காரட் நகைக்கு 750, மற்றும் 22 காரட் நகைக்கு 916 என்பதைக் குறிக்கும் வகையில், நகைகளில் 14ஓ585, 18ஓ750, 22ஓ916 என்று குறிப்பிடப்படும். இதற்கு முன்பு நேர்த்தித்தன்மையைக் குறிக்கும் 916 என்பது போன்ற எண் மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கும்.
- மேலும் ஹால்மார்க் முத்திரையில் இடம்பெற்றிருந்த 5 குறியீடுகளில் முத்திரையிடப்பட்ட ஆண்டு நீக்கப்பட்டு, மீதம் உள்ள 4 குறியீடுகள் மட்டுமே இடம் பெற்றிருக்கும்

❖ **ஆந்திரபிரதேசத்தில்**, **"ஆரோக்ய ரக்ஷா" (Arogya Raksha) எனும் பெயரில் குடும்ப மருத்துவ காப்பீட்டுத்** திட்டத்தை அம்மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு புத்தாண்டு தினத்தில் துவக்கி வைத்துள்ளார். மாதம் ரூ.100 பிரீமியம் செலுத்துவதன் மூலம் **வறுமைக்கோட்டிற்கு மேலுள்ள அனைவரும்** இத்திட்டத்தின் மூலம் பலனடையலாம்.

❖ **இந்தியாவின் முதல் திருநங்கைகளுக்கான பள்ளியான "சாகஜ் இண்டர்நேசனல்"** (Sahaj International) **கேரளமாநிலத்தில், எர்ணாகுளம்** மாவட்டத்தில் துவக்கப்பட்டுள்ளது.

❖ **"மாநில குடியிருப்போர் தகவல் பட்டியல்"** (State Resident Data Base (SRDB)) தயாரிப்பதில் உதவி பெறுவதற்காக **ஹரியானா அரசு ஆந்திரபிரதேச அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்** செய்துள்ளது.

## சர்வதேச நிகழ்வுகள்

❖ உலகிலேயே முதல்முறையாக **"டிஜிட்டல் தூதுவரை" (digital ambassador)** நியமித்துள்ள நாடு - **டென்மார்க்**

- பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நடைபெற்ற 2017-ஆம் ஆண்டின் **பிரபஞ்ச அழகிக்கான போட்டியில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த மருத்துவ மாணவி ஐரிஷ் மிட்டனேரே வெற்றி பெற்றுள்ளார்.**

- **அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்ற பிறகு டிரம்பை சந்தித்த முதல் சர்வதேசத் தலைவர்** எனும் பெருமையை **பிரிட்டன் பிரதமர் தெரஸா மே** பெற்றுள்ளார்.

- **மோரீஷஸ் பிரதமர் அனிருத் ஜகந்நாத் தனது பதவியை ராஜிநாமா செய்துள்ளார்**. அதையடுத்து அவரது மகன் **பிரவீந்த்** ஆட்சிப் பொறுப்பேற்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

- அமெரிக்காவின் உளவு அமைப்பான Central Intelligence Agency இன் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளவர் - **மைக் பாம்பியோ (Mike Pompeo)**

- **சிரியா உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தை கஜகஸ்தான் தலைநகர் அஸ்தானாவில் துவங்கியுள்ளது**. சிரியா அரசுக்கு எதிரான அரசியல் கிளர்ச்சி, கடந்த 2011-ஆம் ஆண்டில் உள்நாட்டுப் போராக வெடித்து இன்றளவும் நடைபெற்றுக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

- அமெரிக்க ஜனாதிபதியாக புதிதாகப் பொறுப்பேற்றுக்கொண்ட குடியரசுக் கட்சியைச் சார்ந்த, **டொனால்ட் டிரம்ப்** அதிபராகப் பதவியேற்றதும் தனது முதல் கையெழுத்தை, முந்தைய அதிபர் ஒபாமா அறிமுகம் செய்த **மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை ரத்து** செய்து, மாற்றுத் திட்டத்தைக் கொண்டு வரும் உத்தரவில் இட்டுள்ளார்.

- விக்கிலீக்ஸ் வலைதளத்திடம் ராணுவ ரகசியங்களைக் கசிய விட்டமைக்காக அமெரிக்க ராணுவ வீராங்கனை செல்ஸீ மேன்னிங்குக்கு விதிக்கப்பட்டிருந்த 35 ஆண்டு கால சிறைத் தண்டனையை 7 ஆண்டாகக் குறைத்து அதிபர் ஒபாமா உத்தரவிட்டுள்ளார்.

- **இஸ்ரேல் - பாலஸ்தீன் நாடுகளுக்கிடையேயான அமைதி பேச்சுவார்த்தைக்கான** சர்வதேச கூடுகை பிரான்சு நாட்டின் **பாரிஸ் நகரில்** நடைபெறவுள்ளது.

www.tnpscportal.in

- **நிலவில் நடந்த கடைசி மனிதனும், அமெரிக்க விண்வெளி வீரருமான யூஜின் செர்னான் (Eugene Cernan) மரணமடைந்துள்ளார்**. இவர் டிசம்பர் 1972ல் அப்பொல்லோ 17 எனும் விண்கலம் மூலம் நிலவுக்கு சென்று அதில் நடந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

- **"wet foot, dry foot policy" என்பது** கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக அமெரிக்காவின் கியூபா நாட்டின் மீதான கொள்கையாகும். சமீபத்தில் பாரக் ஒபாமா இந்த கொள்கைக்கு முடிவுக்கு கொண்டுவந்ததன் மூலம் கியூபா நாட்டு மக்கள் பெருமளவு பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இஸ்ரேல் - பாலஸ்தீன நாடுகளுக்கிடையேயான அமைதி பேச்சுவார்த்தை **பிரான்சு தலைநகர் பாரிஸில்** துவங்கியுள்ளது.
- **மேற்கு ஆப்பிரிக்க நாடான கானாவில் புதிய அதிபராக அகுஃபோ அட்டோ 7-1-2017 அன்று பதவியேற்றுள்ளார்**.

- **தென் கொரியாவில் ஜப்பான் துணைத் தூதரகம் முன்பு அமைக்கப்பட்டுள்ள "பாலியல் அடிமைப் பெண்' சிலைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், அந்த நாட்டுக்கான ஜப்பான் தூதர் யாசுமாஸா நாகமினே திரும்ப அழைக்கப்பட்டார்.**

    - இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பான் ராணுவத்தினரை மகிழ்விப்பதற்காக கொரிய தீபகற்பம், சீனா உள்ளிட்ட நாடுகளிலிருந்து சுமார் 2 லட்சம் பெண்களை பாலியல் அடிமைகளாக ஜப்பான் பயன்படுத்தியதாக வரலாற்று அறிஞர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

    - 1910-ஆம் ஆண்டிலிருந்து, 1945-ஆம் ஆண்டு வரை கொரிய தீபகற்பம் ஜப்பானின் காலனியாதிக்கத்தின்கீழ் இருந்தபோது பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

    - இந்த விவகாரம் தொடர்பாக தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கிடையே பல ஆண்டுகளாக பதற்றம் நிலவி வந்தது குறிப்பிடத்தக்கது.

- IMAFT (Islamic Military Alliance to Fight Terrorism) எனப்படும் சர்வதேச அளவில் தீவிரவாதத்திற்கு எதிரான இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பின் தலைமையிடம் **சவுதி அரேபியாவின், ரியாத்** நகரில் அமைந்துள்ளது.

www.tnpscportal.in

- **இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுக பகுதியில், சீன ஆதரவுடன் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.** அம்பாந்தோட்டையில் அமையும் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் 80 சதவீதப் பங்குகளை சீனாவுக்கு அளிக்கும் வகையில் இரு தரப்புக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.
- சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ள ஆய்வில், **டைட்டானிக் கப்பல் விபத்திற்குள்ளாகி மூழ்குவதற்கு முக்கிய காரணம் தீ விபத்து** தான் என கண்டறியப்பட்டுள்ளது.
- வேலைவாய்ப்பற்றவர்களுக்கு அடிப்படை மாத ஊதியம் வழங்குவதாக அறிவித்துள்ள உலகின் முதல் நாடு - **பின்லாந்து**
- சென்ற **2016-ஆம் ஆண்டில் 93 பத்திரிகையாளர்கள் கொலை** செய்யப்பட்டதாக சர்வதேச பத்திரிகையாளர்கள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.
- சீனாவில் 1,854 அடி உயரத்தில் கட்டமைக்கப்பட்ட **உலகின் மிக உயரமான பாலமான "பெய்பான்ஜியாங்" பாலம்** பொதுமக்கள் பயன்பாட்டுக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.
  - மலைப்பாங்கான பகுதியில் அமைந்துள்ள யுனான் மற்றும் குய்சோகு ஆகிய இரண்டு மாகாணங்களை இணைக்கும் வகையில் இந்தப் பாலம் கட்டமைக்கப்பட்டுள்ளது.
  - இரண்டு மலைகளுக்கும் நடுவே ஓடும் ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள பெய்பான்ஜியாங் பாலத்தின் உயரம் 565 மீட்டர் (1,854 அடி) ஆகும். இது உலகிலேயே மிக உயரமான பாலமாகும்.
- **சீனாவில் உலகிலேயே நீளமான புல்லட் ரயில் வழித்தடம் (2,252 கி.மீ.) செயல்பாட்டுக்கு வந்துள்ளது.**
  - சீனாவில் வளமிக்க கிழக்கு கடற்கரைப் பகுதியிலுள்ள ஷாங்காய், வளர்ச்சி குறைந்த தென்மேற்குப் பகுதியிலுள்ள கன்மிங் ஆகிய நகரங்களை இணைக்கும் 2,252 கி.மீ. தொலைவு கொண்ட இந்த வழித்தடம், ஷிஜியாங், ஜியாங்ஷி, ஹுனான், குவாங்ஷு, யுனான் ஆகிய 5 மாகாணங்கள் வழியாகச் செல்கிறது.

www.tnpscportal.in

- இந்த வழித்தடத்தில் மணிக்கு 330 கி.மீ. வேகத்தில் ரயில்கள் இயக்கப்படும்.
- இதனால், ஷாங்காய் - கன்மிங் இடையிலான பயண நேரம் 34 மணி நேரம் என்பதில் இருந்து 11 மணி நேரமாக குறையும்.

❖ 1944-ஆம் ஆண்டில் வீசப்பட்ட, இரண்டாம் உலகப் போர் காலத்து வெடிகுண்டை செயலிழக்கச் செய்வதற்காக ஜெர்மனியில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வெளியேற்றப்பட்ட சம்பவம் டிசம்பர் 2016 ல் நடைபெற்றுள்ளது.

❖ தற்போது, புதிதாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியில் **“டைட்டானிக் கப்பல்” மூழ்கியதற்கான காரணம் தீ விபத்து** என கண்டறியப்பட்டுள்ளது.

## முக்கிய நியமனங்கள்

❖ **"ஒலிம்பிக் இலக்கு மேடை" (Target Olympic Podium (TOP))** எனும் பெயரில் 2020 மற்றும் 2024 ஆம் ஆண்டு ஒலிம்பிப் போட்டிகளுக்கான வீரர்களைத் தெரிவு செய்யும் குழுவின் **தலைவராக அபினவ் பிந்த்ரா (Abhinav Bindra)** நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ ஐக்கியநாடுகளவையின், இந்தியாவிற்கான நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான (Sustainable development goals) நல்லெண்ணத் தூதுவராக டென்னிஸ் வீரர் **அசோக் அமிரித்ராஜ் (Ashok Amritraj)** நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ **இந்திய தபால் பேமண்ட் வங்கியின் (India Post Payments Bank (IPPB))** இடைக்கால மேலாண் இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக **A P சிங் (A P Singh) நியமிக்கப்பட்டுள்ளார்.**

❖ நளந்தா பல்கலைக்கழகத்தின் வேந்தராக **Dr.விஜய் பட்கார் (Dr.Vijay Bhatkar)** நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ **ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதராக, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நிக்கி ஹேலி நியமிக்கப்படுவதற்கு அந்த நாட்டு நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கியது.**

- ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளதன் மூலம், அந்த நாட்டின் கேபினட் அந்தஸ்து கொண்ட ஒரு பதவிக்கு நியமிக்கப்படும்

முதல் இந்திய-அமெரிக்கர் என்ற சாதனையை நிக்கி ஹேலி படைத்துள்ளார்.

- ஏற்கெனவே, தெற்கு கரோலினாவின் ஆளுநராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, ஒரு அமெரிக்க மாகாணத்தின் ஆளுநராகப் பொறுப்பேற்ற முதல் இந்திய வம்சாவளிப் பெண் என்ற பெருமையை அவர் பெற்றார்.
- லூசியானா மாகாணத்தின் ஆளுநர் பாபி ஜிண்டாலுக்கு அடுத்தபடியாக, நிக்கி ஹேலிதான் மாகாண ஆளுநராகப் பதவியேற்ற அமெரிக்க-இந்தியர் என்பது குறிப்பிடத்தக்கது.
- டொனால்ட் டிரம்ப்பின் அரசில், கேபினட் அந்தஸ்து கொண்ட பதவியில் அமர்த்தப்படும் முதல் பெண் என்ற பெருமையும் நிக்கி ஹேலிக்கே கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. **இவர் இந்தியாவின் பஞ்சாப் மாகாணத்திலிருந்து அமெரிக்காவில் குடியேறிய பெற்றோருக்குப் பிறந்தவராவர்.**

❖ **சிபிஐயின் புதிய இயக்குநராக அலோக் குமார் வர்மா நியமிக்கப்பட்டுள்ளார்**. இவர் தில்லி காவல்துறையின் ஆணையராகப் பணியாற்றிவர். பிரதமர் நரேந்திர மோடி, உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஜே.எஸ்.கேஹர், மக்களவை காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே ஆகியோர் கொண்ட மூவர் குழு, அலோக் குமார் வர்மாவை தேர்வு செய்துள்ளது.

❖ **அமெரிக்காவின் 45-ஆவது அதிபராக டொனால்ட் டிரம்ப்** 20-1-2017 அன்று பதவியேற்றார்.

❖ **அகில இந்திய கால்பந்து சம்மேளனத்தின் (ஏஐஎஃப்எஃப்) தலைவர் பிரஃபுல் படேல், சர்வதேச கால்பந்து சங்கங்கள் சம்மேளனத்தின் (ஃபிஃபா) நிதிக் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்**. அவர் அந்தப் பொறுப்பில் 4 ஆண்டுகள் இருப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖ தென்னிந்திய திருச்சபையின் 2017-20 -ம் ஆண்டுகளுக்கான பிரதமப் பேராயராக **தாமஸ் கே.உம்மன் தேர்வு** செய்யப்பட்டுள்ளார்.

❖ **ஐரோப்பிய பாராளுமன்றத்தின் தலைவராக இத்தாலியைச் சேர்ந்த ஆண்டனியோ டஜானி (Antonio Tajani)** நியமிக்கப்பட்டுள்ளார்.

- பிரசார் பாரதி அமைப்பின் இடைக்கால முதன்மை செயல் அதிகாரியாக **ராஜீவ் சிங்** நியமிக்கப்பட்டுள்ளார்.

- "**அட்லாண்டிக் கவுன்சில்**"(Atlantic Council) எனப்படும் சர்வதேச அமைப்பின் தலைமையிடம் அமெரிக்காவிலுள்ள வாசிங்க்டன் டிசி யில் உள்ளது. சமீபத்தில் , இவ்வமைப்பின் மூத்த கவுரவ உறுப்பினராக காங்கிரஸ் கட்சியை சார்ந்த **மணிஸ் திவாரி** நியமிக்கப்பட்டுள்ளார்.
- **டாடா சன்ஸ் தலைவராக தமிழகத்தைச் சேர்ந்த என். சந்திரசேகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.** இவர் தமிழ் வழியிலேயே படித்து இந்த அளவுக்கு உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

- **மத்திய அமெரிக்க நாடான நிகராகுவாவின் அதிபராக டேனியல் ஓர்டேகன்** (71), **மூன்றாவது முறையாக பதவியேற்றுக் கொண்டார்**. அவரது மனைவி ரோஸாரியோ முரில்லோ துணை அதிபராகப் பதவியேற்றார். நிகராகுவாவின் உயரிய இரு பதவிகளை ஒரு தம்பதி வகிப்பது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

- Flipkart **நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியாக கல்யாண் கிருஷ்ணமூர்த்தி** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

- அமெரிக்காவின் புதிய அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்டு டிரம்ப், தனது துணை உதவியாளராகவும், தகவல் தொடர்பு மற்றும் ஆராய்ச்சி இயக்குநராகவும் **இந்தியாவைப் பூர்விகமாகக் கொண்ட ராஜ் ஷா என்பவரை நியமித்துள்ளார்.**

- **உச்ச நீதிமன்றத்தின் 44-ஆவது தலைமை நீதிபதியாக ஜெகதீஷ் சிங் கேஹர் 04-01-2017 அன்று பதவியேற்றார்.**
    - குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, அவருக்கு பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். ஆங்கிலத்தில் கடவுளின் பெயரால் ஜே.எஸ்.கேஹர் உறுதிமொழி ஏற்றார்.
    - 64 வயதாகும் நீதிபதி கேஹர், சீக்கிய சமூகத்தைச் சேர்ந்த முதல் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
    - அடுத்த சுமார் 8 மாதங்கள் வரை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவி வகிக்க உள்ள அவர், வரும் ஆகஸ்ட் 27-ஆம் ஓய்வு பெறுவார்.

- ○ தேசிய அளவில் சர்ச்சையை ஏற்படுத்திய தேசிய நீதிபதிகள் நியமன ஆணையம் அமைக்கும் சட்டம் தொடர்பான வழக்கில், அந்தச் சட்டம் அரசியல்சாசனத்துக்கு விரோதமானது என்று அறிவித்தது நீதிபதி கேஹர் தலைமையிலான அமர்வுதான்.
- ○ அருணாசலப் பிரதேசத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டதை திரும்பப் பெற்றது,
- ○ சாரதா குழும தலைவர் சுப்ரதா ராயை சிறைக்கு அனுப்பியது, அந்த நிறுவனத்தில் முதலீடு செய்த பொதுமக்களுக்கு பணத்தைத் திருப்பிக் கொடுக்க உத்தரவிட்டது,
- ○ "ஒரே வேலைக்கு ஒரே ஊதியம்' என்ற தீர்ப்பை வழங்கியது என பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்புகளை வழங்கியது நீதிபதி ஜே.எஸ்.கேஹர் தலைமையிலான அமர்வுதான்.

❖ மத்திய குடிமைப்பணி தேர்வு ஆணையத்தின் (Union Public Service Commission ) தலைவராக **டேவிட் R சைம்லீ (David R Syiemlieh)** நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ **அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களாக 5 இந்தியர்கள் பதவியேற்பு** :

- ○ சென்னையை பூர்வீகமாகக் கொண்ட கமலா ஹாரிஸ் (52), அமெரிக்க செனட் சபை உறுப்பினராக பதவியேற்றார். அவருக்கு துணை அதிபர் ஜோ பிடன் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். இதன்மூலம், அமெரிக்க செனட் சபையில் உறுப்பினராகும் முதல் இந்திய வம்சாவளிப் பெண் எனும் பெருமையை கமலா ஹாரிஸ் பெற்றார். கமலா ஹாரிஸின் தாயார் சென்னையைச் சேர்ந்தவர். தந்தை ஆப்பிரிக்க நாடான ஜமைக்காவைச் சேர்ந்தவர். கலிபோர்னியாவில் இருந்து செனட் சபைக்கு கமலா ஹாரிஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ○ அவரைத் தொடர்ந்து, அமெரிக்க பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களாக அமி பெரா (51), ரோ கன்னா (40), ராஜா கிருஷ்ணமூர்த்தி (42), பிரமீளா ஜெயபால் (51) ஆகிய 4 பேர் பதவியேற்றுக் கொண்டனர்.
- ○ 5 பேரும், ஜனநாயக கட்சியின் சார்பில் அமெரிக்க நாடாளுமன்றத்துக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

- இதில், பிரதிநிதிகள் சபை உறுப்பினராக அமி பெரா பதவியேற்பது இது 3-ஆவது முறையாகும். இதன்மூலம், 3 முறை பிரதிநிதிகள் சபைக்கு தேர்வு செய்யப்பட்ட இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தலீப் சிங் சௌந்தின் சாதனையை அமி பெரா சமன் செய்தார். இதேபோல், அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் முதல் இந்திய வம்சாவளிப் பெண் உறுப்பினர் என்னும் பெருமையை பிரமீளா ஜெயபால் பெற்றார்.

- தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஆலோசகராக தமிழகத்தைச் சார்ந்த ஐ.ஏ.எஸ் அதிகாரி **வி.திருப்புகழ்** அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

- **ரிசர்வ் வங்கியின் செயல் இயக்குநராக சுரேகா மாராண்டி** (Surekha Marandi) நியமிக்கப்பட்டுள்ளார்.

- **ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநராக விரால் வி. ஆச்சார்யா** நியமிக்கப்பட்டுள்ளார்.

- **கிர்கிஸ்தான் (Kyrgyzstan) நாட்டின் இராணுவ தளபதியாக** ( Major General ) இந்தியாவில் பிறந்த தொழிலதிபரான **சேக் ரா:பிக் மொகமது (Shaikh Rafik Mohammed)** நியமிக்கப்பட்டுள்ளார்.

- **ரோமானியா (Romania) நாட்டின் புதிய பிரதமராக ”சோரின் க்ரிண்டேனு” (Sorin Grindeanu) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்**. தென்கிழக்கு ஐரோப்பிய நாடான ரொமானியாவின் தலைநகர் **”புஜ்ஜாரெஸ்ட்” (Bucharest)** ஆகும்.

# பொருளாதாரம்

- **ஜி.ஏ.ஏ.ஆர்., (General anti-avoidance rule (GAAR) )எனப்படும், பொது வரி ஏய்ப்பு தடுப்பு சட்ட விதிகள், வரும், ஏப்., 1 முதல் நடைமுறைக்கு வருகின்றன**. மொரீஷியஸ் போன்ற வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளில், வரி ஏய்ப்பு நடைபெறுவதை தடுக்கும் நோக்கில், பல்வேறு கட்டுப்பாடுகளுடன் கூடிய, ஜி.ஏ.ஏ.ஆர்., எனப்படும், பொது வரி ஏய்ப்பு தடுப்பு விதிகள் கொண்டு வரப்பட்டுள்ளன.வரி ஏய்ப்பை தடுப்பதற்கான, ஜி.ஏ.ஏ.ஆர்., விதிமுறைகள், பிரிட்டன், சீனா, சிங்கப்பூர் நாடுகளில் அமலில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

- **ஏடிஎம் இயந்திரத்தில் இருந்து பணம் எடுப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்படுவதாக ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது**. இது வரும்



www.tnpscportal.in

பிப்ரவரி1-ஆம் தேதி முதல் அமலுக்கு வரும். அதேநேரத்தில் வாரத்துக்கு ரூ.24 ஆயிரம் மட்டுமே எடுக்கலாம் என்ற கட்டுப்பாடு நீக்கப்படவில்லை.

- 20-1-2017 இன் படி, இந்தியாவின் அந்நியச் செலவாணி (foreign exchange) **கையிருப்பு 360.775 பில்லியன் டாலர்** என ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

- டிஜிட்டல் பணபரிவர்த்தனையை அதிகமாகப் பயன்படுத்தும் மாவட்டத்தை ஊக்குவிக்கும் வகையில், **அஸ்ஸாம் மாநில அரசு "முதலமைச்சர் விருது" (Chief Minister Award)** எனும் புதிய விருதை அறிமுகப்படுத்தியுள்ளது.

- ரூபாய் நோட்டு வாபஸ் நடவடிக்கையை அடுத்து மின்னணு பணப் பரிமாற்றத்துக்கான வழிமுறைகளை வகுப்பதற்காக ஆந்திர முதல்வர் **என்.சந்திரபாபு நாயுடு தலைமையில் அமைக்கப்பட்ட குழு தனது இடைக்கால அறிக்கையை 24-1-2017 அன்று தாக்கல் செய்துள்ளது.**

- **அஸ்ஸாம்: 5 நூற்றாண்டுகளாக பணப் பரிவர்த்தனை இல்லாத குக்கிராமம்!** அஸ்ஸாம் மாநிலம், குவாஹாட்டியிலிருந்து 32 கி.மீ. தூரத்தில் கடந்த 5 நூற்றாண்டுகளாக முழுக்க முழுக்க பணப் பரிவர்த்தனையே இல்லாத குக்கிராமம் உள்ளது. அந்த கிராமத்தில் பாபிலோனியர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட பண்டமாற்று முறை இன்னும் பயன்பாட்டில் உள்ளது.

- **12 நாடுகள் இடையே ஏற்பட்ட பசிபிக் வர்த்தக ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகியது** : அமெரிக்கா, ஜப்பான், மலேசியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா, மெக்சிகோ உள்ளிட்ட 12 நாடுகளிடையே 'டி.பி.பி.' என்னும் பசிபிக் வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட்டது. கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் நியூசிலாந்து நாட்டில் உள்ள ஆக்லாந்தில் 12 நாடுகளின் மந்திரிகள் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இது உலக பொருளாதாரத்தில் 40 சதவீத பங்களிப்பு செய்யக்கூடியதாகும்.இந்த ஒப்பந்தம், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் ஆசிய கொள்கையின் அச்சாணியாக விளங்கியது. இத்திட்டத்தை பெருமளவில் விமர்சித்த தற்போதைய அதிபர் டொனால்டு டிரம்ப், பசிபிக் வர்த்தக ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகுவதாக அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

- **"நிதி பொறுப்பு மற்றும் பட்ஜெட் மேலாண்மை" ( Fiscal Responsibility and Budget Management (FRBM)) பற்றிய NK சிங் ( NK Singh ) தலைமையிலான குழு** தனது அறிக்கையை மத்திய நிதி அமைச்சகத்தில் சமர்ப்பித்துள்ளது.

- பள்ளி மாணவர்களுக்கிடையே நிதி அறிவை வளர்ப்பதற்காக **"FI@School" எனும் திட்டத்தை** அறிமுகம் செய்துள்ள வங்கி - **கேரளா கிராமீன் வங்கி**

- இந்திய தொலைத்தொடர்பு நிறுவனமான **பிஎஸ்என்எல், பாரத ஸ்டேட் வங்கியும் இணைந்து பணமில்லா பரிவர்த்தனைக்கு 'மொபிகேஷ்' எனும் புதிய செயலியை அறிமுகப்படுத்தியுள்ளன.**

- **ரூபாய் நோட்டு விவகாரம்: பொது கணக்குக் குழுவிடம் ரிசர்வ் வங்கி ஆளுநர் விளக்கம்** : உயர்மதிப்பு ரூபாய் நோட்டுகள் வாபஸ் பெறப்பட்ட விவகாரம் தொடர்பாக நாடாளுமன்ற பொது கணக்குக் குழு (பிஏசி) முன்பு ரிசர்வ் வங்கி ஆளுநர் உர்ஜித் படேல் 20-11-2017 அன்று நேரில் ஆஜராகி விளக்கம் அளித்தார்.

- **ரூ.2 கோடி வரை வரி ஏய்ப்பு செய்வது ஜாமீன் வழங்கக்கூடிய குற்றம்** என்று ஜி.எஸ்.டி. குழு முடிவு செய்துள்ளது.

- சமீபத்தில், பங்கு சந்தையில் இணைத்துக்கொள்ள மத்திய அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுள்ள ஐந்து காப்பீட்டு நிறுவனங்கள் - **National Insurance Company, New India Assurance Company, Oriental Insurance Company, United India Insurance Company மற்றும் General Insurance Corporation of India**

- **சர்வதேச அளவில் வேகமாக வளர்ந்து வரும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி நிகழாண்டில் 7.6 சதவீதம் முதல் 7.7 சதவீதம் வரை இருக்கும் என்று ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது**. எனினும், ரூபாய் நோட்டு வாபஸ் நடவடிக்கையால் ஏற்படும் விளைவுகள் இதில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

- **ஐரோப்பிய யூனியனிலிருந்து விலகும்போது, ஐரோப்பிய பொதுச் சந்தையிலிருந்தும் பிரிட்டன் விலகும்** என்று அந்த நாட்டின் பிரதமர் தெரசா மே அறிவித்துள்ளார்.

- "An Economy for the 99 percent" எனப்படும் பொருளாதார அறிக்கையை வெளியிட்டுள்ள தனியார் நிறுவனத்தின் பெயர் - **Oxfam**

- **ஜனவரி 2017 ல், "The World Economic Outlook Update 2016" எனும் அறிக்கையை சர்வதேச நாணய நிதியம்( International Monetary Fund) எனும் அமைபு வெளியிட்டுள்ளள்ளது**, இந்த அறிக்கையின் படி, 2017 ஆம் நிதியாண்டில்,

www.tnpscportal.in

இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது (ஜி.டி.பி) எதிர்பார்க்கப்பட்ட 7.6% லிருந்து 6.6% மாக குறையும் என கணிக்கப்பட்டுள்ளது.

- **சரக்கு மற்றும் சேவைகள் வரி முறை ( GST ) யை வரும் ஜீலை 1, 2017 முதல் அமல்படுத்துவதற்கு** ஜி.எஸ்.டி கவுன்சில் முடிவெடுத்துள்ளது.
- **ஆசிய உட்கட்டமைப்பிற்கான முதலீடு வங்கி (Asian Infrastructure investment bank) யில் உறுப்பினராக இணைவதற்கு இதுவரையில் 30 நாடுகள் ஆர்வம் தெரிவித்துள்ளனர்.** 25 டிசம்பர் 2015 முதல் செயல்பாட்டிற்கு வந்துள்ள இந்த அமைப்பின் தலைமையிடம் சீனாவின் பீஜிங் நகரில் உள்ளது. இவ்வமைப்பில் ஏற்கனவே 50 உறுப்பினர்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.
- **உலக பொருளாதார மன்றம் (World Economic Forum) எனும் அமைப்பு வெளியிட்டுள்ள "உள்ளடங்கிய வளர்ச்சிக்கான அறிக்கை 2017" (inclusive growth and development report 2017) எனும் அறிக்கையில் இந்தியா 60 வதாவது இடத்தைப் (79 வளரும் நாடுகளில்) பெற்றுள்ளது.** இப்பட்டியலில் லித்தூனியா நாடு முதலிடத்தையும் அசர்பெய்ஜான் இரண்டாமிடத்தையும் ஹங்கேரி மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளன.
- சிறப்பு பொருளாதார மண்டலங்களைப்பற்றிய அனைத்து தகவல்களை உள்ளடக்கியும், டிஜிட்டல் பணப்பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் **வகையிலும் SEZ India எனும் மொபைல் அப்ளிகேசனை மத்திய வணிகம் தொழில்துறை அமைச்சகம் (Ministry of commerce and industry) அறிமுகப்படுத்தியுள்ளது.**
- **இந்தியாவின் முதல் பணமற்ற தீவு எனும் பெருமையை மணிப்பூர் மாநிலத்திலுள்ள காரங் (Karang) தீவு பெற்றுள்ளது**. இந்த தீவு மணிப்பூரிலுள்ள லோக்டாக் (Loktak Lake) ஏரியின் நடுவில் அமைந்துள்ளது.
- டிஜிட்டல் பணபரிவர்த்தனையை ஊக்குவிக்கும் வண்ணம், மத்திய பிரதேச அரசு, **"டிஜிட்டல் டாகியா" (Digital Dakiya)** எனப்படும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது
- இந்தியாவின் முதல் மாணவர் தொழில்துவக்குவோருக்கான கொள்கையை வெளியிட்டுள்ள மாநிலம் - **குஜராத்**
- **ரூபாய் நோட்டு வாபஸ் நடவடிக்கையினால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் குறையும் என உலக வங்கி கணித்துள்ளது**. இந்தியாவின்

பொருளாதார வளர்ச்சி விகிதம், நிகழ் நிதியாண்டில் 7.6 சதவீதமாக இருக்கும் என்று உலக வங்கி ஏற்கெனவே கணித்திருந்த நிலையில், உயர் மதிப்புடைய ரூபாய் நோட்டுகள் வாபஸ் நடவடிக்கை காரணமாக, **அது 7 சதவீதமாகவே இருக்கும்** என்று தற்போது கணித்துள்ளது.

- **உலக வங்கி ( World Bank ), ஜனவரி 2017 ல் Global Economic Prospects எனப்படும் பொருளாதார அறிக்கையை வெளியிட்டுள்ளது**. இவ்வறிக்கையின் படி, 2017 ஆம் ஆண்டில் **உலகப் பொருளாதாரம் 2.7 சதவீதம் வளர்ச்சியைக் காணும்** என கணிக்கப்பட்டுள்ளது.

- **குஜராத் மாநிலம், காந்திநகரில் நாட்டின் முதலாவது சர்வதேச பங்குச் சந்தையை பிரதமர் நரேந்திர மோடி 9-1-17 அன்று தொடக்கி வைத்தார்**.காந்திநகரின் கிஃப்ட் சிட்டி (குஜராத் இண்டர்நேஷனல் ஃபைனான்ஸ் டெக்-சிட்டி) பகுதியில் "இந்தியா-ஐஎன்எக்ஸ்' என்ற பெயரில் சர்வதேச பங்குச் சந்தை அமைக்கப்பட்டுள்ளது.

- SIDBI - **Small Industries Development Bank of India**

- **இந்தியாவில் விவசாயிகளின் தற்கொலை 42% ஆக உயர்வு: தமிழகத்துக்கு மூன்றாம் இடம்** :

    - இந்தியாவில் கடந்த 2014 - 2015ம் ஆண்டுகளில் விவசாயிகளின் தற்கொலை 42 சதவீதம் அதிகரித்திருப்பதாக தேசிய குற்றப்பதிவு கழகம் வெளியிட்ட புள்ளி விவரம் தெரிவிக்கிறது.

    - 2014ம் ஆண்டில் 5650 விவசாயிகள், தற்கொலை செய்து கொண்டு உயிரிழந்தனர். இந்த எண்ணிக்கை 2015ல் 8007 ஆக உயர்ந்துள்ளது. **இதில் மகாராஷ்டிராவில் 1261 பேரும், மத்தியப் பிரதேசத்தில் 709 பேரும்** தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இந்த மாநிலங்களுக்கு அடுத்தபடியாக, **தமிழகத்தில் 604 விவசாயிகள் தற்கொலை** செய்து கொண்டிருப்பது வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

- இந்திய சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கு பயிற்சி வழங்கும் வண்ணம் **"Digital Unlocked" எனும் திட்டத்தை கூகுள் ( Google )** நிறுவனம் துவங்கியுள்ளது.

www.tnpscportal.in

- இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த சிறந்த பொருளியல் வல்லுநரான **டோனி அத்திங்ஸன் ( Tony Atkinson ) மரணமடைந்தார்.**

- ஜனவரி 2017 ல் இந்தியாவுடன் இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு தொடர்பான ஒப்பந்தத்தில் (Double Taxation Avoidance Convention) திருத்தங்களை மேற்கொள்ளும் ஒப்பந்தத்தை செய்துகொண்ட நாடு - **கஸகஸ்தான் (Kazakhstan)**

- ரூ.100 கோடி மதிப்பிலான ரூ.100 ரூபாய் நோட்டுகளை நேபாளம் நாட்டிற்கு வழங்குவதற்கு ரிசர்வ் வங்கி ஒப்புதல் தெரிவித்துள்ளது.

- **டிஜிட்டல் பரிவர்த்தனை தொடர்பான வாடிக்கையாளர்களின் சந்தேகங்களை கேட்டறிவதற்காக இலவச உதவி எண் “14444” அறிமுகம் செய்யப்பட்டுள்ளது**. இந்த உதவி எண் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளில் பயன்பாட்டில் இருக்கும். விரைவில் நாடு முழுவதும் மற்ற மொழிகளில் இந்த சேவை விரிவுபடுத்தப்படும்”

- **மத்திய கணக்கு கட்டுப்பாட்டு அதிகாரியாக (Controller General of Accounts) அர்ச்சனா நிகாம் (Archana Nigam) நியமிக்கப்பட்டுள்ளார்.** இதற்கு முன்னர் அப்பதவியை வகித்தவர் எம்.ஜே.ஜோசப் என்பவராவர்.

- **பேஸ்புக் மெசஞ்சர் (Facebook Messenger) மூலம் பணம் செலுத்தும் வகையில், “OnChat”** எனப்படும் புதிய செயலியை **எச்.டி.எஃப்.சி வங்கி** அறிமுகப்படுத்தியுள்ளது.

- ரூபாய் நோட்டு வாபஸ் நடவடிக்கைக்குப் பிறகு 60 லட்சம் பேரின் வங்கிக் கணக்குகளில் ரூ.7 லட்சம் கோடி டெபாசிட் செய்யப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- **தனியார் துறையைச் சேர்ந்த ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி, பணப் பரிமாற்றத்துக்கான "ஈஸிபே' என்ற புதிய செயலியை** டிசம்பர் 2016ல் அறிமுகம் செய்துள்ளது.

## முக்கிய தினங்கள்

- **தேசிய தொழுநோய் ஒழிப்பு தினம் - ஜனவரி 30** . இவ்வாண்டு, தேசிய அளவில் **‘ஸ்பார்ஸ் திட்டம்’ (Sparsh campaign)** எனும் பெயரில் தொழுநோய் ஒழிப்பு விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்தப்பட்டன.

- தேசிய தியாகிகள் தினம் - **ஜனவரி 30 (மஹாத்மா காந்தி மறைந்த தினம்)**
- தேசிய நோய்த்தடுப்பு தினம் (National Immunization Day) - **ஜனவரி 29**
- **இந்தியாவிலேயே முதல் முறையாக, ஜனவரி 27 ஐ, விவசாய தியாகிகள் தினமாக அஸ்ஸாம் மாநிலம் அறிவித்துள்ளது**. 1894 ஆம் ஆண்டு ஜனவரி 27 ல் நடைபெற்ற விவசாயிகள் புரட்சியின் நினைவாக இத்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது. அஸ்ஸாம் மாநிலம் பதுருகாட் (தாரங் மாவட்டம்) எனுமிடத்தில் நடைபெற்ற, இந்த எழுச்சியின் போது 140 விவசாயிகள் அப்போதைய ஆங்கிலேய அரசினால் படுகொலை செய்யப்பட்டனர்.
- **தேசிய வாக்காளர் தினம் - ஜனவரி 25**
- தேசிய சுற்றுலா தினம் - **ஜனவரி 25**
- **தேசிய பெண் குழந்தைகள் தினம் (National Girl Child Day) - ஜனவரி 24** . இவ்வாண்டு பெண்குழந்தைகள் தினத்தின் நோக்கம் "பெண்குழந்தைகளைப் பாத்காப்போம், கற்பிப்போம்" என்பதாகும்.
- **நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ்** பிறந்த தினம் - **ஜனவரி 23** (இவ்வாண்டில், 120 வது பிறந்த தினம்)
- **எம்.ஜி.ஆர்., நூற்றாண்டு விழா ஜனவரி 17-ஆம்** (பிறந்த தினம் : 17 January 1917) **தேதியன்று** கொண்டாடப்பட்டது.
- **இந்திய இராணுவ தினம் ஜனவரி 15 அன்று அனுசரிக்கப்பட்டது.** கடந்த 1949-ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் 15ஆம் தேதியன்றுதான், பிரிட்டனைச் சேர்ந்த ஜெனரல் சர் பிரான்சிஸ் புட்சரிடம் இருந்து ராணுவத் தலைமைத் தளபதி பதவியை லெப்டினென்ட் ஜெனரல் கே.எம். கரியப்பா பெற்றுக் கொண்டார். இந்த தினம், ஆண்டுதோறும் ராணுவ தினமாக கொண்டாடப்படுகிறது குறிப்பிடத்தக்கது.
- **முல்லைப் பெரியாறு அணையைக் கட்டிய பென்னி குயிக் பிறந்த தினம் ஜனவரி 14** அன்று கொண்டாடப்பட்டது.
- சுவாமி விவேகானந்தர் பிறந்த நாள் - **ஜனவரி 12**
- **"Pravasi Bharatiya Divas" எனப்படும் வெளிநாடு வாழ் இந்தியர் தினம் (Non-Resident Indian Day) ஜனவரி 9 ம் நாள் அனுசரிக்கப்படுகிறது**. 14 வது ஆண்டான, இவ்வருடம் இத்தினத்திற்கான சிறப்பு நிகழ்வுகள் **பெங்களூரு நகரில்** துவங்கப்பட்டன.

- **ஜே.சி. குமரப்பாவின் 125-ஆம் பிறந்த தினம் 04-01-2016 அன்று நினைவுகூரப்பட்டது**. காந்தியப் பொருளாதார மேதை என அழைக்கப்படும் ஜே.சி. குமரப்பா தஞ்சாவூரில் 1892, ஜனவரி மாதம் 4-ஆம் தேதி பிறந்தார். நம் நாட்டின் முழுமையான பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களை வகுப்பதில் முக்கிய பங்காற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

- **உலக பிரைலி தினம் - ஜனவரி 4** ( பார்வையற்றோருக்கான எழுத்து முறையை கண்டுபிடித்த பிரான்ஸ் நாட்டைச்சார்ந்த லூயிஸ் பிரைலி அவர்களின் பிறந்த தினத்தில் அனுசரிக்கப்படுகிறது)

- 2017 ஆம் ஆண்டை ஐக்கிய நாடுகளவை **"சர்வதேச சீரான சுற்றுலா மேம்பாட்டு வருடமாக" (International Year of Sustainable Tourism for Development)** அறிவித்துள்ளது.

- **12ஆம் ஆண்டு சுனாமி நினைவு தினம் டிசம்பர் 26 அன்று அனுசரிக்கப்பட்டது.** கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் தேதி சுமத்ரா தீவுகளில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக, இந்தியா, இலங்கை, இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளின் கடலோர மாவட்டங்களில் சுனாமி பேரலை தாக்கியது. தமிழகத்தில் கன்னியாகுமரி உள்ளிட்ட 13 கடலோர மாவட்டங்களும் பேரழிவைச் சந்தித்தன. இதில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## விருதுகள் / மரியாதைகள்

- **ஏனாமைச் சேர்ந்த ராணுவ வீரருக்கு வீர தீரச் செயலுக்கான சேனா விருது** : பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் நடைபெற்ற துல்லிய தாக்குதலில் பங்கேற்ற ஏனாமைச் சேர்ந்த **ராணுவ வீரர் ஓலேட்டி லட்சுமி வீர நரேஷுக்கு**, வீர தீரச் செயலுக்கான சேனா விருது வழங்கப்பட்டுள்ளது.

- **குடியரசுத் தலைவரின் பாலஸ்ரீ விருதுக்கு, நாமக்கல் ஜவஹர் சிறுவர் மன்ற மாணவி எஸ்.பி.மதுரிதா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.** நாமக்கல் மாவட்டத்தில் இருந்து இவ்விருது பெறும் முதல் மாணவி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

- **"தேசிய தொழில் முனைவோர் விருது" (National Entrepreneurship Awards)** என்ற விருதை மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவுத் துறை (Ministry of Skill Development and Entrepreneurship) அறிமுகம் செய்துள்ளது.

www.tnpscportal.in

- இந்திய அரசின், "தேசிய புவி அறிவியல் விருது 2016" பெற்றுள்ள விஞ்ஞானி - **கேசவ் கிருஷ்ணா**

- **பத்ம விருதுகள் 2017 அறிவிக்கப்பட்டுள்ளன.** விருது பெற்றோருக்கு வரும் மார்ச், ஏப்ரல் மாதங்களில் இரு பிரிவுகளாக குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெறும் நிகழ்வில் வழங்கப்படும். விருதுகளின் விபரம் பின்வருமாறு.

**பத்மவிபூஷண்:**

- பிரபல பாடகர் கே.ஜே.ஜேசுதாஸ் (இசை),
- தமிழகத்தை தலைமையிடமாகக் கொண்டுள்ள ஈஷா யோகா மையத்தின் நிறுவனர் ஜக்கி வாசுதேவ் (ஆன்மிகம்),
- தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத் பவார்,
- பாஜக மூத்த தலைவர் முரளி மனோகர் ஜோஷி (பொது விவகாரம்), செயற்கைக்கோள் விஞ்ஞானி உடுப்பி ராமசந்திர ராவ் (அறிவியல்),
- மறைந்த தலைவர்களான மத்திய பிரதேச மாநில முன்னாள் முதல்வர் சுந்தர் லால் பட்வா,
- மக்களவை முன்னாள் தலைவர் பி.ஏ.சங்மா (பொது விவகாரம்)

**பத்மபூஷண்:**

- தமிழகத்தைச் சேர்ந்த மறைந்த சோ (இலக்கியம், கல்வி, இதழியல் பிரிவில்)
- ஹிந்துஸ்தானி இசைக் கலைஞர் விஸ்வ மோகன் பட்,
- சம்ஸ்கிருத அறிஞர் தேவி பிரசாத் துவிவேதி,
- ஜைன மத குரு ரத்ன சுந்தர் மகராஜ்,
- யோகா நிபுணர் சுவாமி நிரஞ்சனா நந்த சரஸ்வதி,
- லேப்ரோஸ்கோபி அறுவை சிகிச்சையின் தந்தை என்றழைக்கப்படும் மருத்துவர் டெஹம்டான் உத்வாடியா,

www.tnpscportal.in

- தாய்லாந்து இளவரசி மஹா சக்ரி ஷிரிந்தோர்ன்

**பத்மஸ்ரீ:**

- கடந்த ஆண்டு பாராலிம்பிக் போட்டியில் இந்தியாவுக்கு தங்கம் வென்ற தமிழகத்தைச் சேர்ந்த தடகள வீரர் மாரியப்பன்,
- மிருதங்க கலைஞர் டி.கே.மூர்த்தி,
- பிரான்ஸ் நாட்டில் பிறந்து இந்தியாவில் குடியுரிமை பெற்று தமிழகத்தில் வசித்து இலக்கியப் பணியாற்றி வரும் மிஷெல் டேனினோ,
- சமூக சேவகர் நிவேதிதா ரகுநாத்,
- எய்ட்ஸ் நோய் பாதிப்பை இந்தியாவில் கண்டுபிடித்த முதலாவது மருத்துவராகவும் ஆராய்ச்சியாளராகவும் திகழ்ந்த மறைந்த சுனிதி சாலமன்,
- தமிழகத்தில் பிறந்து ஹரியாணாவில் குடியேறியுள்ள மக்களவையின் முன்னாள் செகரட்டரி ஜெனரல் டி.கே.விஸ்வநாதன்
- கன்னட திரைப்பட நடிகை பாரதி விஷ்ணுவர்தன்,
- கேரளத்தைச் சேர்ந்த பாடகி பிரஸ்ஸால பொன்னம்மாள்,
- கேரளாவை சேர்ந்த தற்காப்பு கலையான, 'களரி' பயிற்றுனர் மீனாட்சி
- ஹிந்தி திரைப்பட பாடகி அனுராதா போட்வால்,
- குஜராத்தை சேர்ந்த திரைப்பட பாடகர் புருஷோத்தம் உபாத்யாய்,
- திரிபுராவைச் சேர்ந்த சர்வதேச ஜிம்னாஸ்டிக் வீராங்கனை தீபா கர்மாகர்,
- குண்டு எறிதல் வீராங்கனை தீபா மாலிக், கிரிக்கெட் வீரர் விராட் கோலி,
- மல்யுத்த வீராங்கனை சாக்ஷி மாலிக், வட்டு எறிதல் வீரர் விகாஸ் கௌடா,
- இந்திய ஹாக்கி அணித் தலைவர் ஸ்ரீஜேஷ்,
- பத்திரிகையாளரும் திரை விமர்சகருமான பாவனா சோமய்யா,
- விஷ்ணு பாண்டியா, கேரளத்தைச் சேர்ந்த தற்காப்புக் கலை வீராங்கனை மீனாட்சியம்மா,

www.tnpscportal.in

- தொல்லியல் ஆய்வாளர் மறைந்த அசோக் குமார்,
- வெளிநாடு வாழ் இந்தியர்களான இசை கலைஞர் இம்ரத் கான், ஆனந்த் அகர்வால், ஹெச்.ஆர்.ஷா
- நேபாளத்தைச் சேர்ந்த சமூக சேவகர் அனுராதா கொய்ராலா உள்பட மொத்தம் 75 பேர்.

❖ **ஆஸ்கர் விருதுக்கு இந்திய நடிகர் தேவ் படேல் பெயர் பரிந்துரை:** "லயன்' என்ற ஹாலிவுட் திரைப்படத்தில் நடித்ததற்காக சிறந்த துணை நடிகருக்கான பிரிவில் ஆஸ்கர் விருதுக்கு இந்திய - நடிகரான தேவ் படேல் பரிந்துரைக்கப்பட்டுள்ளார். இவர் ஏற்கெனவே ஆஸ்கர் விருது பெற்ற "ஸ்லம்டாக் மில்லியனர்' என்ற திரைப்படத்தின் கதாநாயகன் என்பது குறிப்பிடத்தக்கது.

❖ **கோவை உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் தமிழ் விருதுகள் 2016 :** 2016ஆம் ஆண்டுக்கான உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் **இலக்கிய விருது எழுத்தாளர் சிவசங்கரி, சூழலியல் விருது தியோடர் பாஸ்கரன்** மற்றும் **தமிழறிஞர் விருது பேராசிரியர் தொ. பரமசிவனுக்கு** வழங்கப்பட்டுள்ளன.

❖ **அசோக சக்ரா 2017 :** டில்லியில் நடந்த குடியரசுதின விழாவில் ராணுவத்திற்கான உயரிய விருதான அசோக சக்ரா, காஷ்மீரில் 2016 ல் 3 பயங்கரவாதிகளை சுட்டு கொன்று தன்னுயிரையும் நீத்த, **அசாமை சேர்ந்த ஹவில்தார் ஹங்பான்தாதா** என்ற வீரரை கவுரவிக்கும் வகையில் அவரது மனைவி ஷாசன்லாவாங் தாதாவிடம் வழங்கப்பட்டுள்ளது.

❖ 2016-ம் ஆண்டு நடைபெற்ற தமிழக சட்டமன்ற தேர்தலில் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், மிகச்சிறப்பாக செயல்பட்டு, வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தியதற்காக, **தந்தி டி.வி.க்கு, சிறந்த தொலைக்காட்சிக்கான தேசிய விருது அறிவிக்கப்பட்டுள்ளது**. ஒவ்வொரு ஆண்டும் வாக்காளர் தினத்தன்று இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்தநிலையில், ஜனவரி 25-ம் தேதி கொண்டாடப்பட உள்ள 7-வது தேசிய வாக்காளர் தினத்தன்று தந்தி டிவிக்கு இந்த விருது வழங்கப்படும்.

❖ **நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்விற்கான தங்க மயில் விருது 2016 ( Golden Peacock Award for Corporate Social Responsibility ) தில்லி சர்வதேச விமான நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது** . Institute Of Directors (IOD), India எனும்

அமைப்பின் மூலம் வழங்கப்படும் இவ்விருது, 1991 ம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது.

- **"ஃபோஸ்டன்" (Boston Consulting Group (BCG))** நிறுவனம் வெளியிட்டுள்ள, 2016 ஆம் ஆண்டின், உலகின் **மிகச் சிறந்த புதுமை நிறுவனங்களின் பட்டியலில் (most innovative company of 2016) ஆப்பிள்** (Apple) நிறுவனம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

- 2017 ஆம் ஆண்டின் 65வது பிரபஞ்ச அழகி (மிஸ் யுனிவர்ஸ்) போட்டியில் நடுவராகப் பங்கேற்கவுள்ள இந்திய நடிகை - **சுஷ்மிதா ஷென்.** இவ்வருடம், இந்தியாவின் சார்பில் 'மிஷ் யூனிவர்ஸ்' போட்டியில் கலந்துகொள்ளவிருப்பவர் **ரோஷ்மிதா ஹரிமூர்த்தி** ஆவர். இப்போட்டிகள், பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள மணிலா நகரில் நடைபெறவுள்ளன.

- 62வது ஃபிலிம் பேர் விருதுகளில் சிறந்த திரைப்படத்திற்கான விருது பெற்றுள்ள திரைப்படம் - **"டங்கல்" (Dangal)**
- **தமிழக அரசு விருதுகள் 2017.** இந்த விருதுகள் திருவள்ளுவர் திருநாளான ஜனவரி 15 -ஆம் தேதி முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் அவர்களால் வழங்கப்பட்டன. விருதுகள் விபரம் பின்வருமாறு,
  - திருவள்ளுவர் விருது (2017) - புலவர் பா.வீரமணிக்கும்
  - பெரியார் விருது (2016) -பண்ருட்டி ராமச்சந்திரன்
  - அம்பேத்கர் விருது(2016) - மருத்துவர் இரா.துரைசாமி
  - அண்ணா விருது (2016) - கவிஞர் கூரம் மு.துரை
  - காமராஜர் விருது (2016) - டி.நீலகண்டன்
  - பாரதியார் விருது (2016) - முனைவர் ச.கணபதிராமன்
  - பாரதிதாசன் விருது (2016) - கவிஞர் கோ.பாரதி
  - திரு.வி.க.விருது (2016) - பேராசிரியர் மறைமலை இலக்குவனார்
  - கி.ஆ.பெ.விசுவநாதம் விருது (2016) - மீனாட்சி முருகரத்தினம்

- **அமெரிக்க துணை அதிபர் ஜோ பிடனுக்கு அந்நாட்டின் மிக உயரிய விருதான "அதிபர் சுதந்திரப் பதக்கம்**' என்ற விருதை அதிபர் ஒபாமா வழங்கியுள்ளார்.

- **திரைப்படங்களில், புதிய தொழிற்நுட்பங்களை புகுத்தியமைக்கான, 'ஆஸ்கர்' விருது, அமெரிக்காவில் வசிக்கும், கோவையைச் சேர்ந்த தொழில்நுட்ப வல்லுனர், கிரண் பட் என்பவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.** 2016ம்

ஆண்டுக்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப விருதுகளை, 18 பேருக்கு, 'தி அகாடமி ஆப் மோஷன் பிக்சர் ஆர்ட்ஸ் அண்ட் சயின்ஸ்' அறிவித்துள்ளது. இவர்களில் ஒருவர் கிரண்பட், 41. அமெரிக்காவில் வசிக்கிறார். பூர்வீகம் கோவை, சாய்பாபா காலனி.

- **கேரள மாநிலத்தின் உயரிய விருதான "ஹரிவராசனம் விருது'க்காக, இசையமைப்பாளரும், பாடகருமான கங்கை அமரன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.** மத நல்லிணக்கத்துக்கும், தேசிய ஒருமைப்பாட்டுக்கும் அவர் ஆற்றிய பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக, அவருக்கு 2017-ஆம் ஆண்டின் ஹரிவராசனம் விருது வழங்கப்படவுள்ளது.
- **எழுத்தாளர் மாலனுக்கு "ஆய்வுக் கொடையை' ("ஃபெலோஷிப்') சிங்கப்பூர் தேசிய நூலகம் வழங்கியுள்ளது.**
    - **"லீ காங் சியான் ஆய்வறிஞர்'** என்ற சிறப்புக் கௌரவத்தை அவருக்கு இந்த ஆண்டு சிங்கப்பூர் தேசிய நூலகம் வழங்கியுள்ளது. சிங்கப்பூரில் 6 மாதம் தங்கியிருந்து சிங்கப்பூர் தமிழ் இலக்கியம் குறித்த ஆய்வு ஒன்றினை அவர் மேற்கொள்வதற்கு இந்தக் கௌரவம் வாய்ப்பளிக்கும்.
    - 16 மாடி கட்டடத்தில் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட நூல்கள், 700-க்கும் மேற்பட்ட இதழ்கள், குறுந்தகடுகள், ஒலிப் புத்தகங்களுடன் உலகின் சிறந்த நூலகங்களில் ஒன்றாக சிங்கப்பூர் தேசிய நூலகம் விளங்குகிறது. இந்த நூலகத்தை 1960-ஆம் ஆண்டு கொடையாளரும் சீன வணிகருமான "லீ காங் சியான்' நிறுவினார். அவரது பெயரில் "லீ காங் சியான் ஆய்வறிஞர்' என்ற சிறப்பு ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது குறிப்பிடத்தக்கது.
- **பாரதீய ஜனபீட அமைப்பின் "நவ்லேகான் விருது 2016"** ( Navlekhan Award ) சாராதா மற்றும் கியான்ஷாம் குமார் தேவன்ஷ் (Shraddha and Ghyansham Kumar Devansh) ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
- **சங்கர் பால சுப்ரமணியன்** எனப்படும் இங்கிலாந்தில் வசிக்கும் இந்திய பேராசியருக்கு அந்நாட்டின் உயரிய விருதான **Queen Elizabeth II Knighthood** வழங்கப்பட்டுள்ளது.

- IFFHS (International Federation of Football History & Statistics) னால் 2016 ஆண்டின் சிறந்த கால்பந்து வீரர் எனும் விருதை பெற்றுள்ளவர் - **லியோணல் மெஸ்ஸீ (Lionel Messi) (அர்ஜெண்டினா)**

- பிரதமர் நரேந்திர மோடியிடமிருந்து, பணமற்ற பரிமாற்றத்தை ஊக்குவிக்க சிறப்பாக பணியாற்றியதற்கான **"ஸ்கிரால் ஆஃப் ஹானர்" (Scroll of Honor) எனும் விருதை ஆஜ்மீர் மாவட்ட ஆட்சியர் கவுரவ் கோயல் பெற்றுள்ளார்**. டிஜிட்டல் பணபரிமாற்றத்தை ஊக்குவிப்பதற்கான இவ்விருது மத்திய தகவல் தொழில்நுட்ப துறை மற்றும் நிதி அயோக் ஆகியவற்றால் இணைந்து வழங்கப்படுகிறது.

# அறிவியல் தொழில்நுட்பம்

- **ஜிஎஸ்எல்வி மார்க்-3 ராக்கெட்டில் பொருத்தக்கூடிய கிரையோஜெனிக் மேல்நிலை என்ஜினின் முதல்கட்ட தகுதிநிலைச் சோதனை வெற்றி பெற்றுள்ளதாக இந்திய விண்வெளி ஆய்வு அமைப்பு (இஸ்ரோ) தெரிவித்துள்ளது.**
  - இதன் இரண்டாம் கட்டச் சோதனையும் வெற்றி பெற்றால், கிரையோஜெனிக் என்ஜின் பொருத்தப்பட்ட ராக்கெட் மூலம் அதிக எடை கொண்ட செயற்கைக்கோள்களை எளிதாக விண்ணில் செலுத்த முடியும்.
  - புவி சுற்றுவட்டப் பாதையில் செயற்கைக்கோள்களை நிலைநிறுத்துவதற்காக கடந்த 2000-ஆம் ஆண்டில் ஜிஎஸ்எல்வி மார்க்-3 ராக்கெட்டை வடிவமைக்கும் பணியை இஸ்ரோ தொடங்கியது. 2009-2010-இல் இந்த ராக்கெட்டை விண்ணில் செலுத்தத் திட்டமிட்டிருந்த நிலையில், பல்வேறு காரணங்களால் தாமதமடைந்து வந்தது.
  - இந்த நிலையில், 2017-ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் ஜிஎஸ்எல்வி மார்க்-3 ராக்கெட் உதவியுடன் ஜிசாட்-19 செயற்கைக்கோளை புவிநிலை சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தத் திட்டமிட்டுள்ளது.
  - சி25 என்று அழைக்கப்படும் கிரையோஜெனிக் மேல்நிலை என்ஜின், திரவ ஆக்ஸிஜன் மற்றும் திரவ ஹைட்ரஜன் கொண்டதாக இருக்கும். இரு தனித் தொட்டிகளில் 27.8 டன் திரவ ஆக்ஸிஜன் மற்றும் திரவ ஹைட்ரஜன் எரிபொருள் வைக்கப்பட்டிருக்கும்.

- உலகின் முதல்முறையாக, அமெரிக்காவிலுள்ள ஆய்வகத்தில், **மனித - பன்றி உயர்ரக கலப்பின கரு (Human-pig hybrid embryo)** உருவாக்கப்பட்டுள்ளது.

- **'அப்பீல்' (Ababeel) என்ற பாலிஸ்டிக் ரக கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை பாகிஸ்தான் வெற்றிகரமாக சோதித்துள்ளது.** இது, அணு ஆயுதங்கள் உள்ளிட்ட பல்வேறு ஆயுதங்களை சுமந்து சென்று, 2,200 கி.மீ. தூரம்வரை பாய்ந்து சென்று இலக்கை துல்லியமாக தாக்கக்கூடியது. இந்தியாவில் உள்ள பல்வேறு நகரங்கள், இந்த தூரத்துக்குள்தான் உள்ளன. இந்த ஏவுகணை, எதிரி நாட்டு ராடார்களின் பார்வையில் சிக்காது. தரையில் இருந்து பாய்ந்து சென்று தரையில் உள்ள மற்றொரு இலக்கை தாக்கவல்லது.

- **ஜப்பான்** தனது முதல் இராணுவ தொலைத்தொடர்பு செயற்கைக் கோளான **"கிரமேகி 2" (Kirameki-2)** ஐ வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.

- **உலகின் மிகப்பெரிய சூரிய மின்சக்தி பூங்கா சீனாவின் கின்காய் (Qinghai) மகாணத்தில் அமைக்கப்பட்டுள்ளது**. 27 சதுர கிலோ மீட்டர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள இந்த சூரியசக்தி பூங்காவினால் 850 மெகாவாட் மின்சக்தி தயாரிக்கப்படவுள்ளது.

- சமீபத்தில், **"Aoba Velox-III" எனப்படும் செயற்கைக்கோளை** சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து சுற்றுவட்டப்பாதையில் செலுத்தியுள்ள நாடு - **சிங்கப்பூர்**

- **ரஷிய நாட்டு உதவியுடன், மணிக்கு 200 கி.மீ. வேகத்தில் செல்லும் அதிவேக ரயில்கள் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட இருக்கின்றன.** தற்போது, இந்தியாவில் இப்போதைய அதிவேக ரயில் **கதிமான் எக்ஸ்பிரஸா**கும். இந்த ரயில் ஒரு மணி நேரத்தில் 160 கி.மீ. தொலைவைக் கடக்கும் என்பது நினைவுகூரத்தக்கது.

- **உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இலகு ரக "தேஜஸ்' போர் விமானம் முதல் முறையாக, தில்லியில் வரும் 26-ஆம் தேதி நடைபெறும் குடியரசு தின விழாவில் வான் சாகசத்தில் ஈடுபட உள்ளது.** தில்லியில் கடந்த 1980 மற்றும் 1990-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற குடியரசு தின விழாக்களில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட "மருத்' என்ற போர் விமானங்கள் கடைசியாகப் பங்கேற்றன. அதன் பிறகு முதன் முறையாக, தில்லியில் வரும் 26-ஆம் தேதி நடைபெற உள்ள குடியரசு தின விழாவில் "தேஜஸ்' ரக போர் விமானம் முதன் முறையாக பங்கேற்று சாகசத்தில் ஈடுபட உள்ளது குறிப்பிடத்தக்கது.

- விண்வெளியின் வெளிப்புற ஆராய்ச்சி தொடர்பாக **ஜப்பான் நாட்டு விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்துடன் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம்** செய்துள்ளது.

- அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமானா நாசாவின் (NASA) ஆய்வின் முடிவில் 1880 முதல் இதுவரையிலான காலகட்டத்தில், **உலகிலேயே வெப்பம் மிகுதியான ஆண்டாக 2016 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டுள்ளது.**
    - **இந்தியாவில் காலநிலை குறித்த விபரங்களை சேமித்து வைக்கும் முறை 1901 ஆம் ஆண்டிலிருந்து தான் துவங்கியது** என்பது குறிப்பிடத்தக்கது.

- **கார்ப்பீன் ரக 2-ஆவது நீர்மூழ்கிக் கப்பலான "கந்தேரி' நாட்டுக்கு 11-1-2017 அன்று அர்ப்பணிக்கப்பட்டது.**
    - கந்தேரி நீர்மூழ்கிக் கப்பலானது, கடலுக்குள் இருந்தபடியும், மேல் பரப்புக்கு வந்தும் எதிரி நாடுகளின் கப்பலை ஏவுகணை வீசித் தாக்கி அழிக்கும் வல்லமை கொண்டது. எதிரி நாடுகளின் நடவடிக்கைகளைக் கண்காணித்தல், கடலில் கண்ணிவெடிகளைக் கண்டுபிடித்தல், தகவல் சேகரித்தல் உள்ளிட்ட பணிகளில் இந்த நீர்மூழ்கிக் கப்பல் ஈடுபடும்.
    - மும்பையில் உள்ள மஸகான் கப்பல் கட்டும் தளத்தில், பிரான்ஸ் நாட்டின் டி.சி.என். நிறுவனத்துடன் சேர்ந்து ஸ்கார்ப்பீன் ரகத்தைச் சேர்ந்த 6 நீர்மூழ்கிக் கப்பல்கள் கட்டப்பட்டு வருகின்றன. அவற்றில் முதல் கப்பலுக்கு "ஐஎன்எஸ் கல்வாரி' என்று பெயரிடப்பட்டு, கடந்த 2015-ஆம் ஆண்டில் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.
    - அதன் தொடர்ச்சியாக 2-ஆவது கப்பலுக்கு கந்தேரி என்று பெயரிடப்பட்டு தற்போது நாட்டுக்கு அர்ப்பணிப்பு செய்யப்பட்டுள்ளது.

- **அதிநவீன "பினாகா-2' ஏவுகணை சோதனை வெற்றி** : ஒடிஸா மாநிலம், பாலாசோர் மாவட்டத்தில் சண்டிப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை மையத்திலிருந்து அதிநவீன மேம்படுத்தப்பட்ட "பினாகா' மார்க்-2 ஏவுகணை வெற்றிகரமாக 11-1-2017 அன்று சோதிக்கப்பட்டது. மகாராஷ்டிர மாநிலம், புணேவில் உள்ள போர்க்கருவிகள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு

(ஏஆர்டிஈ), தெலங்கானா மாநிலம், ஹைதராபாத்தில் உள்ள பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆய்வகம் (டிஆர்டிஎல்) ஆகியவை இணைந்து "பினாகா' மார்க்-2 ஏவுகணையை உருவாக்கின. பினாகா மார்க்-1 ஏவுகணையைக் காட்டிலும் மார்க்-2 ஏவுகணை கூடுதல் அதிநவீன வசதிகளைக் கொண்டுள்ளது.

- **ஜனவரி 2017 ல்** இந்திய விண்வெளிக்கழகமான , **இஸ்ரோ (ISRO) செயற்கைக்கோள் அனுப்பும் தொழில்நுட்பம் தொடர்பாக பிரான்சு நாட்டுடன் ஒப்பந்தம்** செய்துள்ளது.
- **சீனா** , உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுல்ள குறைந்த செலவில் உருவாக்கப்பட்டுள்ள **Kuaizhou-1A எனப்படும் ராக்கெட்** மூலம் வணிக ரீதியாக செயற்கைக் கோள்களை செலுத்த தயாராகியுள்ளது.
- **"பாபர்-3' என்று** பெயரிடப்பட்டுள்ள நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து செலுத்தக் கூடிய **அணுஆயுத வல்லமை கொண்ட ஏவுகணையை, பாகிஸ்தான் 9-1-17 அன்று வெற்றிகரமாக பரிசோதித்தது.**
- எஃப்.எம் ரேடியோ (FM radio) ஒலிபரப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ள உலகின் முதல் நாடு - **நார்வே**
- **ஒரே ராக்கெட்டில் 103 செயற்கைக் கோள்களை பிப்ரவரி 2017 முதல் வாரத்தில் விண்ணுக்கு செலுத்த இந்திய அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம்** (இஸ்ரோ) முடிவு செய்துள்ளது. இது, வேறெந்த நாடும் மேற்கொள்ளாத புதிய சாதனை முயற்சியாகும்.ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டா சதீஷ் தவண் விண்வெளி மையத்தில் இருந்து, பிஎஸ்எல்வி-சி37 ராக்கெட் மூலம் ஏவப்படவிருக்கும் இந்த 103 செயற்கைக் கோள்களில், மூன்றை தவிர மற்றவை வெளிநாட்டு செயற்கைக் கோள்களாகும்.
- **இந்தியாவின் முதல் "லேசர் தொழில்நுட்பத்துடன்" கூடிய தானியங்கி வாகன கண்காணிப்பு மற்றும் சோதனை மையம்** (Automatic Vechime Monitoring System (AVMS) RTO check-post) குஜராத் மாநிலம் ஆரவல்லி மாவட்டத்திலுள்ள ஷாம்லாஜி நகரில் அமைக்கப்பட்டுள்ளது.
- பூமியின் சுழற்சி வேகம் குறைந்திருப்பதை அடுத்து, **தில்லி தேசிய இயற்பியல் ஆய்வகத்தில் அமைந்துள்ள அணு கடிகாரத்தில் ஜனவரி 1ம் தேதி ஒரு விநாடி கூடுதலாக** சேர்க்கப்பட்டது. அதாவது, தேசிய இயற்பியல் ஆய்வகத்தில் அணு கடிகாரத்தில் சனிக்கிழமை நள்ளிரவு டிசம்பர் 31ம் தேதி 11.59 மணி 59

விநாடிகள் ஆன போது, புத்தாண்டு பிறந்ததாக கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், அதோடு கூடுதலாக ஒரு விநாடி சேர்க்கப்பட்டு புத்தாண்டு பிறந்ததாக அறிவிக்கப்பட்டது.

## விளையாட்டுகள்

- **இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தை (பிசிசிஐ) நிர்வகிப்பதற்கு முன்னாள் தலைமை கணக்கு தணிக்கை அதிகாரி (சிஏஜி) வினோத் ராய் தலைமையில் 4 பேர் கொண்ட குழுவை நியமித்துள்ளது உச்ச நீதிமன்றம்.** ஓய்வு பெற்ற நீதிபதி லோதா குழுவின் பரிந்துரைகள் முழுமையாக அமல்படுத்தப்பட்டு பிசிசிஐக்கு முறைப்படி புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்படும் வரை வினோத் ராய் தலைமையிலான குழுவே பிசிசிஐயை நிர்வகிக்கும்.
    - இந்தக் குழுவில் வினோத் ராய் தவிர, வரலாற்று ஆய்வாளரும், கிரிக்கெட் எழுத்தாளருமான ராமச்சந்திர குஹா, ஐடிஎஃப்சி (உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி நிறுவனம்) நிர்வாக இயக்குநர் விக்ரம் லிமாயே, இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் டயானா எடுல்ஜி ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.
- **மகளிர் ஒற்றையர் டென்னிஸ் தரவரிசையில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.** முன்னதாக 2-ஆவது இடத்தில் இருந்த செரீனா, ஆஸ்திரேலிய ஓபனில் சாம்பியன் பட்டம் வென்றதன் மூலம் ஜெர்மனியின் ஏஞ்ஜெலிக் கெர்பரை பின்னுக்குத் தள்ளி முதலிடத்தைப் பிடித்துள்ளார். கெர்பர் 2-ஆவது இடத்திலும், செக்.குடியரசின் கரோலினா பிளிஸ்கோவா 3-ஆவது இடத்திலும் உள்ளனர்.
- **ஆஸ்திரேலிய ஓபன்** டென்னிஸ் போட்டித் தொடரின் ஆடவர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் ஸ்பெயினின் ரபேல் நாடலைத் தோற்கடித்து, **ஸ்விட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் சாம்பியன் பட்டம்** வென்றார். இதன்மூலம் 18-ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தைக் கைப்பற்றினார் ஃபெடரர்
- உத்தரப் பிரதேச தலைநகர் லக்னௌவில் நடைபெற்ற **சையது மோடி கிராண்ட்ப்ரீ கோல்டு பாட்மிண்டன்** போட்டியில் **இந்தியாவின் பி.வி.சிந்து, சமீர் வர்மா ஆகியோர் சாம்பியன்** பட்டம் வென்றனர்.

❖ சென்னையில் நடைபெற்ற, **சையது முஷ்டாக் அலி டி20 கிரிக்கெட் போட்டியில் தமிழக அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் கர்நாடக அணியைத் தோற்கடித்தது.**

❖ பத்தொன்பது வயதுக்குட்பட்டோருக்கான **இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்றுநர் (உடற்பயிற்சி) ராஜேஷ் சாவந்த் (45) மரணமடைந்தார்.**

❖ **ஆஸ்திரேலிய ஓப்பன் டென்னிஸ்** போட்டித் தொடரின் மகளிர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் தனது சகோதரி வீனஸ் வில்லியம்சை வீழ்த்தி **செரீனா வில்லியம்ஸ் சாம்பியன் பட்டம்** வென்றார்.

❖ மலேசியாவில் நடைபெற்ற ஆசிய செஸ் போட்டியில் **அண்ணா பல்கலைக்கழகம் ஒட்டுமொத்தமாக இரண்டாம் இடம்பிடித்து சாதனை** படைத்துள்ளது.

❖ **ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில், ஆடவர் இரட்டையர் பிரிவில் ஆஸ்திரேலியாவின் ஜான் பியர்ஸ்-ஃபின்லாந்தின் ஹென்றி கான்டினென் ஜோடி சாம்பியன்** பட்டம் வென்றது.

❖ **'நெஸ்டா கார்ட்டர்' (Nesta Carter)** எனும் வீரர் ஊக்கமருந்து பயன்படுத்தியிருப்பது தெரியவந்ததையடுத்து, **2008 பீஜிங் ஒலிம்பிக்கில், தொடர் ஓட்டத்தில், ஜமைக்கா நாட்டுக்கு வழங்கப்பட்டிருந்த தங்கப் பதக்கம் திரும்பப் பெறப்பட்டுள்ளது.**

❖ **உலகின் முதல் "சப் ஏர் சிஸ்டம்" (Sub Air System) அமைந்துள்ள கிரிக்கெட் ஸ்டேடியம்** எனும் சிறப்பை பெங்களூரிலுள்ள **சின்னஸ்வாமி ஸ்டேடியம்** பெற்றுள்ளது.

❖ 2017 ஆம் ஆண்டின், பார்வையற்றோருக்கான டி 20 கிரிக்கெட் உலகக் கோப்பை **இந்தியாவில்** நடைபெறவுள்ளது.

❖ **தேசிய சப்-ஜூனியர் மகளிர் ஹாக்கி: ஜார்க்கண்ட் சாம்பியன்** : ராமநாதபுரத்தில் நடைபெற்ற தேசிய சப்-ஜூனியர் மகளிர் ஹாக்கிப் போட்டியில் ஜார்கண்ட் அணி சாம்பியன் பட்டம் வென்றது.

❖ **பெங்களூரு பல்கலை அளித்த கவுரவ டாக்டர் பட்டத்தை வாங்க மறுத்த இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் ராகுல் டிராவிட்**, டாக்டர் பட்டத்தை தான் படித்து பெற்றுக் கொள்வதாக தெரிவித்துள்ளார்.

- மலேசியாவின் சாராவாக் நகரில் நடைபெற்ற **மலேசிய மாஸ்டர்ஸ் கிராண்ட்ப்ரீ கோல்டு பாட்மிண்டன் போட்டியில்** இந்தியாவின் **சாய்னா நெவால் சாம்பியன் பட்டம்** வென்றார்.

- **டில்லி சர்வதேச ஓபன் செஸ் போட்டி 2017 ல் தஜிக்கிஸ்தான் (Tajikistan) நாட்டைச் சார்ந்த ஃபரூக் அமோனாட்டோவ் (Farrukh Amonatov) வெற்றி** பெற்றுள்ளார்.

- **உலகிலேயே மிகப்பெரிய கிரிக்கெட் விளையாட்டு மைதானம் குஜராத் மாநிலத்தில் திறக்கப்படவுள்ளது.** ஆமதாபாத்தில் அமையவுள்ள இந்த மைதானத்தில் ஒரே நேரத்தில் 1,10,000 பார்வையாளர்கள் இருந்து விளையாட்டுகளைக் கண்டுகளிக்கலாம்.

- 2016-2017 ஆம் ஆண்டிற்கான **ராஞ்சி டிராபி கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணி கோப்பையை வென்றுள்ளது.**

- Vodofone பிரீமியர் பேட்மிண்டன் போட்டியில் வெற்றி பெற்றுள்ள அணி - **சென்னை ஸ்மாஷர்ஸ்**

- தில்லியில் நடைபெற்ற 2-ஆவது பிரீமியர் பாட்மிண்டன் லீக் போட்டியில் பி.வி.சிந்து தலைமையிலான **சென்னை ஸ்மாஷர்ஸ் அணி, 4-3 என்ற கணக்கில் மும்பை ராக்கெட்ஸ் அணியை வென்று சாம்பியன்** பட்டத்தைக் கைப்பற்றியது.

- 3 **சீனர்களிடம் ஒலிம்பிக் பதக்கம் பறிப்பு** : பெய்ஜிங் ஒலிம்பிக்கில் பளுதூக்குதல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற சீன வீராங்கனைகள் கோவ் லீ (75 கிலோ), சென் ஸியெக்ஸியா (48 கிலோ), லியூ சுன்காங் (69) ஆகியோர் ஊக்கமருந்து பயன்படுத்தியது அம்பலமாகியுள்ளது. இதையடுத்து அவர்களுடைய பதக்கம் பறிக்கப்பட்டுள்ளது.

- **ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் : மும்பையை வென்று கோப்பையை கைப்பற்றியது குஜராத்** : மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் நடைபெற்ற ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் இறுதி போட்டியில் மும்பையை ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் வென்ற குஜராத் அணி முதன்முறையாக கோப்பையை வென்று சாதனை படைத்தது.

- **இந்திய ஒலிம்பிக் சங்கத்துக்கு (ஐஓஏ) மீண்டும் அங்கீகாரம் வழங்கியுள்ளது மத்திய விளையாட்டு அமைச்சகம்.** ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளான சுரேஷ் கல்மாடி, அபய் சிங் செளதாலா ஆகியோர் ஐஓஏ வாழ்நாள் தலைவர்களாக நியமிக்கப்பட்டது திரும்பப் பெறப்பட்டதைத் தொடர்ந்து, ஐஓஏ மீதான தாற்காலிக தடை நீக்கப்பட்டு மீண்டும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- **சர்வதேச கால்பந்து தரவரிசையில் இந்திய கால்பந்து அணி 129-ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.** கடந்த 10 ஆண்டுகளில் இந்திய அணியின் அதிகபட்ச தரவரிசை இதுதான். இந்திய அணி இதற்கு முன்னர் 2005-ஆம் ஆண்டில் 127-ஆவது இடத்தைப் பிடித்தது. அதன்பிறகு இப்போதுதான் பெரிய அளவில் ஏற்றம் கண்டுள்ளது.
- இந்திய ஆண்கள் ஹாக்கி அணியின் கேப்டன் **பி.ஆர்.ஸ்ரீஜீஷ் சர்வதேச ஹாக்கி விளையாட்டு கூட்டமைப்பின் உறுப்பினராகியுள்ளார்.**
- கல்கத்தா ஓபன் ஸ்நூக்கர் சாம்பியன் பட்டம் 2017 ஐ **பங்கஜ் அத்வானி** பெற்றுள்ளார்.
- **இந்திய ஹாக்கி அணியின் கேப்டன் ஸ்ரீஜேஷ், சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் (எப்.ஐ.எச்.) வீரர்கள் கமிட்டியில் உறுப்பினராக** சேர்க்கப்பட்டுள்ளார்.
- **இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் (ஐஓஏ) வாழ்நாள் தலைவர்களாக, ஊழல் குற்றச்சாட்டில் சிக்கிய சுரேஷ் கல்மாடி, அபய் சிங் செளதாலா ஆகியோரை நியமித்ததை அந்தச் சங்கம் திரும்பப் பெற்றுக்கொண்டது.** இதையடுத்து, மத்திய விளையாட்டு அமைச்சகத்தால் ரத்து செய்யப்பட்ட ஐஓஏவின் அங்கீகாரம், மீண்டும் அந்தச் சங்கத்துக்கு வழங்கப்படவுள்ளது.
- **சென்னை ஓபன் டென்னிஸ் (2017) போட்டியின் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயினின் ராபர்ட்டோ பௌதிஸ்டா அகுட் சாம்பியன்** பட்டம் வென்றார்.
- **சென்னை ஓபன் டென்னிஸ் (2017) ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா-ஜீவன் நெடுஞ்செழியன் ஜோடி சாம்பியன்** பட்டம் வென்றது.

- **பிஃபாவின் 2016-ம் ஆண்டிற்கான சிறந்த கால்பந்து வீரருக்கான விருது போர்ச்சுகல் வீரர் ரொனால்டோக்கு வழங்கப்பட்டது.**
- **கத்தார் ஓபன் டென்னிஸ் போட்டியில்** ஆண்கள் ஒற்றையர் பிரிவில் செர்பியா நாட்டின் **நோவாக் டிஜோகோவிக் (Novak Djokovic) சாம்பியன் பட்டம்** வென்றுள்ளளார்.
- **பிரிஸ்பேன் சர்வதேச டென்னிஸ் போட்டியில் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்சா-அமெரிக்காவின் பெத்தானி மாட்டெக் சேன்ட்ஸ் ஜோடி பட்டம் வென்றுள்ளது.**
- **ஒருநாள் போட்டி மற்றும் டி20 கிரிக்கெட்** போட்டிகளுக்கான இந்திய அணியின் **கேப்டன் பதவியிலிருந்து விலகுவதாக மஹேந்திர சிங் தோனி** (35) அறிவித்துள்ளார்.
- தேசிய விளையாட்டு மேம்பாட்டு விதிகளில் (National Sports Development Code) மாற்றங்களை புகுத்துவதற்காக அமைக்கப்பட்ட குழு - **இன்ஜெட்டி ஸ்ரீனிவாஸ் குழு (Injeti Srinivas committee)**
- ஐக்கிய அரபு எமிரேட்டில் நடைபெற்ற, முபாதலா உலக டென்னிஸ் சாம்பியன்சிப் போட்டியில் (Mubadala World Tennis Championship) **ரபேல் நடால் சாம்பியன் பட்டம்** வென்றுள்ளார்.
- **இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் (பிசிசிஐ) தலைவர் அனுராக் தாக்குர், செயலர் அஜய் ஷிர்கே** ஆகியோரை **உச்ச நீதிமன்றம் 02-1-2017 அன்று உடனடியாக நீக்கி அதிரடி உத்தரவு** பிறப்பித்துள்ளது.

## புத்தகங்கள்

- “Mother Teresa: The Final Verdict” எனும் நூலின் ஆசிரியர் - **அருப் சாட்டர்ஜி**
- "The Island of losts girls" எனும் புத்தகத்தின் ஆசிரியர் - **மஞ்சுளா பத்மநாபன்**
- “Barbarian Days: A Surfing Life” என்ற புத்தகத்தின் ஆசிரியர் - **வில்லியம் ஃபின்னிகான் (William Finnegan)**
- ”You Got Magic” எனும் புத்தகத்தின் ஆசிரியர் -**நீல் மாதவ்**

www.tnpscportal.in

- "The Future of India" எனும் புத்தகத்தின் ஆசிரியர் - **விமல் ஜலான் (Bimal Jalan)** , முன்னாள் ரிசர்வ் வங்கி கவர்னர்
- Indian Poets - எனும் புத்தகத்தின் ஆசிரியர் - **ஜீத் தாயில் (Jeet Thayil)**
- "The Karachi Deception" எனும் நூலின் ஆசிரியர் - **சத்ருஜீத் நாத்**
- "The Book Thief" எனும் நாவலின் ஆசிரியர் - **மார்க்கஸ் சூசக் (Markus Zusak)**
- "Kalkatta" என்ற புத்தகத்தின் ஆசிரியர் - **குணால் பாசு**
- சமீபத்தில், தி இந்து பரிசு 2016 பெற்றுள்ள "Jinnah Often came to our house" எனும் புத்தகத்தின் ஆசிரியர் - **கிரண் தோஷி**
- **"An unsuitable boy"** என்பது இந்திய திரைப்பட இயக்குநர் **கரண் ஜோகரின் சுய சரிதை** நூலாகும்.
- "The Karachi Deception" எனும் நூலில் ஆசிரியர் - **சத்ருஜீத் நாத்**
- "The untold story of talking books" எனும் புத்தகத்தின் ஆசிரியர் - **மாத்தீவ் ரூபெரி (Mathew Rubery)**
- **"The Untold Vajpayee: Politician and Paradox"** எனும் புத்தகத்தின் ஆசிரியர் - NP உலேக் (NP Ullekh)
- "Just Another Jihadi Jane" என்ற புத்தகத்தின் ஆசிரியர் - **தபிஷ் கயிர் (Tabish Khair)**
- "Death Under The Deodars: The Adventures of Miss Ripley-Bean" என்ற புத்தகத்தின் ஆசிரியர் - **ரஸ்கின் பாண்ட்**
- People's President: Dr APJ Abdul Kalam எனும் புத்தகத்தின் ஆசிரியர் - **எஸ்.எம்.கான் (SM Khan)**
- **தமிழக முதல்வராக இருந்து மறைந்த ஜெயலலிதா எழுதிய 'ஒருத்திக்கே சொந்தம்' என்கிற முதல் நாவலை ஜனவரி மாதத்தின் 'குடும்ப நாவல்' இதழில் மறுபதிப்பு செய்துள்ளார்கள்.**
    - ஜெயலலிதாவின் முதல் நாவல் 'ஒருத்திக்கே சொந்தம்' 1980ம் ஆண்டு வெளியானது. இந்த நாவலை மாலைமதி பதிப்பகம் வெளியிட்டது. நாவல் எழுத வேண்டும் என்ற கனவை நனவாக்கியவர், ஜெயலலிதாவின் நெருங்கிய நண்பரும், மறைந்த துக்ளக் ஆசிரியருமான சோ.

www.tnpscportal.in

- ஒரு நாயகனுக்கும், 2 நாயகிகளுக்கும் இடையிலான பாசக் கதைதான் 95 பக்கம் கொண்ட 'ஒருத்திக்கே சொந்தம்' நாவலின் கரு. இந்த நாவலை படிக்க வேண்டும் என்ற பலரின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் குடும்ப நாவல் இதழில் இது மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

- "The Secret Chord" எனும் புத்தகத்தின் ஆசிரியர் - **ஜெரால்டின் புரூக்ஸ் (Geraldine Brooks)**

---

**படியுங்கள் ! பகிருங்கள் ! வெற்றி பெறுங்கள் !**

போட்டித்தேர்வுகளுக்கான தினசரி நடப்பு நிகழ்வுகள் மற்றும் மாதிரித்தேர்வுகள் www.tnpscportal.in இணையதளத்தில் தொகுத்து வழங்கப்படுகின்றன. படித்து பயனடையுங்கள் !

**இந்த நடப்பு நிகழ்வுகள் பற்றிய உங்கள் கருத்துக்களை mail@tnpscportal.in ல் தெரிவியுங்கள்.**

**உங்கள் முயற்சிகளில் வெற்றிபெற வாழ்த்துக்கள் !**

www.tnpscportal.in